வுள் துணை

# திருப்பழனிநான்மணிமாலை, திருப்பழனிவெண்பா, சிவகிரியமகவந்தாதி, விநாயகமூர்த்திபதிகம், ஸரஸ்வதி அம்மன பஞ்சரத்தினம்.

இவை

பழநாபுரி மஹா வித்வகுல சிரோன்மணியாகிய

ம-ள-ள-ஸ்ரீ

ட. சுப மபாழக்கவிச்சிங்கநாவலரவர்களால்

இயற்றப்பட்டு

சேலம் சு. மாரியப்ப முதலியார்

முயற்சியினால்

ஜவுளிக்கடை

க. ம. ஷெக்மொய்தீன் சாயபு அவர்களிட

சேலம்

சுதேசாபிமானி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

நந்தன௵ ஆவணி ௴ | இதன் விலை அணா 4.

1892

Registered and Copy Right.

உ

கடவுள் துணை

பழநாபுரி

ம-ா-ா-ஸ்ரீ கனம் பொருந்திய

மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்களாலியற்றிய

# பழநி நான்மணிமாலை.

கட்டளைக்கலித்துறை.

தபாஞ்சிலாக்ய விபுதர்பரவுத் தனிமுதலே
சுபாஞ்சிதம்பெறு மெய்ப்பொருளே யுயர்சுத்தமதா
னைபாஞ்சிதம்புக ழன்பர்க்குதவு நயவருள்சே
ரபாஞ்சிவேழமுகனே நின்பாத மடைக்கலமே. க

இதுவுமது.

நீதிரிபும்பெறு பாவமுந்தொல்லைச் சிறுமையுமிப்
போதிரியும்படி நாளுங்கருணை புரிந்தருள்வ
மாதிரியம்பகன் வண்டினஞ்சூழு மலர்நிறைபூம்
பாதிரிவேழமுகவன் செந்தாமரைப் பாதங்களே. உ

இதுவுமது.

வீசலைவேலை புடைசூழ்புவிதனில் வேளினது
பூசலைநீக்கு மறிந்தறியாமன்முற் போதுசெய்த
மாசலைவான துயர்தீர்க்குமொற்றை மருப்பருட்கட்
கோசலைவேழ முகவன்பொற்றாள்சிரங் கொண்டவர்க்கே. ங

காப்பு—வெண்பா

மணிமாலைக் கும்பதன வள்ளியன்பன் றன்றன்
மணிமாலை யின்பமிக வாழ்த்திப்—பணிவோர
கம்பகரவாரணமேற் காமுற்றிலங்குசெம்பொற்
கம்பகரவாரணமே காப்பு.

நூல்—வெண்பா.

நாதாவலங்கார நாயகாவின்னுமென்மேல்
வாதாவலங்கார வாணலைகயம்—போதார்
குழனிமலைதந்த குமராவயல்சூழ்
பழனிமலையாய் கடைக்கண்பார். க

# பழநி நான்மணிமாலை.

### கலித்துறை.

பாரப்பருவ முலையார்மயலைப் பகைத்துநின்றன்
சேரப்பருவ ரலைநீத்தெனக்கருள் செய்விடையை
யூரப்பருவ ரலையுண்டவற்குமொன் றோதியலங்
காரப்பருவ தமதிற்குலாவிய காவலனே. ௨

### விருத்தம்.

வலனேபுரிந்து மருக்குலவுமலர்கடுவி விடையமதிற்
புலனேகாம னிறவின்றன்போற்றித் தமியேன்பணிந்தநல்ல
பலனேபெறுதற் கருட்கடைக்கண்பார்த்துக் கவலைதீர்த்தாள்வாய்
கலனேர்குடிகொண முலைக்குறத்திகணவா வடிவேற்கரத்தானே. ௩

### அகவல்.

தானேகலைப்படு மானேபோலக்
காணுறளகத் தேனுரிளஞ்சொல்
விடந்திகழ்கருங்கண் மடந்தையர்கலவி
தனைமிகவிரும்பி யுனைநிதமறந்து
மதிதடுமாறி நிதிபலதேட
வொல்லெனவோடிவெம் புலவரைப்பாடியு
மிழிவொடுதிரியுந் தொழில்பழகாம
லமிழ்தினுமதுரத் தமிழெனுமலர்கொண்
டுன்பதாம்புயத்தை யன்பினுற்போற்றிப்
புகழக்கருணை புரிவாய்
பகர்தற்கரிய பழமறைப்பொருளே. ௪

### வெண்பா.

பொருளிலங்கும்பத்தனத்தார் புன்மயனீக்கும்பத்
தருளிலங்கும்பத்தனத்தார் தம்மா-மருகனன்பாற்
பாடுபவர்க்கஞ்செல்வம் பாலிப்பானைப்பணிவோர்
வாடுபவர்க்கஞ்செல் வரோ. ௫

### கலித்துறை.

செல்வரத்தானை மயிலாடுமாமலைத் தேவைமலர்ச்
செல்வரத்தானை யவுணர்படையைச் செறுத்துவென்ற
செல்வர்த்தானை முருகனைப்போற்றல் செய்யார்நரகிற
செல்வரத்தானை குவர்கெடுவாரித் திறநிசமே. ௬

### விருத்தம்.

மேகமெனுங்குழல் சீவிவகிர்ந்ததில் வேர்புனையிங்கிதமாதர்மா
மோகநெடுங்கட லூடனைதன்பனு மூழ்கிமனஞ்செயல்சோர்வேனோ
தேசபவந்தவிர் யோகர்வணங்கிய சேவடிதந்தெனையாளாயோ
மாகநிலந்தந்த விவேகசாருந்தயர் மாறவிளங்கியகோமானே. ௭

அகவல்.

மானேர்வரிவிழி மடமங்கையர்தம்
ஊனேகுடிகொண் டுறுகடிதடமெனுங்
கொடும்பகம்விளையுந் தடம்பணையதனுள்
உலப்பருவிதிவலிக் கலப்பையின்வசமாய்த்
தாமதகுணத்தரு காமமாங்கயிற்றிற்
கட்டுண்டடர்மட மூட்பெருங்கோலால்
இடிபட்டுழபக டெனமதிதளர்ந்து
காறமொறிக் கதியினையிழந்து
மிடையுமுற்பவச்சேற் றிடைகிடந்துழன்று
வீணேதிரிந்தருள் பேறுதவர்காண்
மறைகளின்முடிமீ துறைபரஞ்சோதி
குரவணிதிகழ்புய சரவணபவனிரு
பாதபங்கயத்தை யேதினந்துதித்து
வந்தனைபுரிந்து மகிழ்மின்
சிந்தையினினைந்தவை சித்தித்திடவே. ௮

வெண்பா.

திடத்தருணமீதுவருந் தேவாவருள்செய்
திடத்தருணமீதுவருந் தேலென்—றிடர்ப்பிணிதீர்
வாமாவிளங்குமரா மாலைபுரன்பொற்புயச்செல்
வாமாவிளங்குமரா வா. ௯

கலித்துறை.

வானத்தமர னம்பணைசூழ்ந்த வையாபுரியாய்
வானத்தமர ரசேநினைத்த வரமருளே
வானத்தமர மூகின்மேனியான்மரு காமலர்போல்
வானத்தமர கதவில்லிபெற்றகண் மாமணியே. ௧௦

விருத்தம்.

மணிமகுடவண்டர்சில தவமதுபுரிந்தமுனி வார்மவுனர்வந்துமுறையே
பணியுமுருகன்றனது திருவடியையன்புகொடு பலத்ரநினைந்துபுகழ்வோ
ரணியுலகிலின்பமுற வெருபொழுதிருந்துதெளி வறிவினொடுபின்புகமனூர்
கணிதர்தமைவென்றினிய கருணைபெருகும்பரம கதியினலனும்பெறுவரே. ௧௧

அகவல்.

பெறுபேறறிவெனு முறுபாகெறிந்து
பொங்குமதேசமா மங்குசந்துறந்து
கழிபெருங்காமக் கடுஞ்சினமயலெனும்
இழிவுடைமும்மதம் பொழிதாவுலக
பாசமாகியமூக படாத்தினிலமைந்து

## பழநி நான்மணிமாலை.

தொடர்ந்திடுமெழுபவ விடங்கணிதாங்கி
மைதோய்ந்தநெடுழியின் மறலிபோற்கறுத்து
நெய்தோய்வேலென நீண்டிருகுழையொடு
பொருதுமென்குமிழின் புறமறிந்தொதுங்கி
முழுக்கொலைகளவும் பழுத்தொளிர்தடங்கண்
மங்கைமார்புளகிதக் கொங்கைமால்வரையைக்
கண்டேறுநர்பொரு ளுண்டெனவிரும்பிச்
சார்பினிறசென்றித ழுறலையருந்தி
மயங்கெடுமெக்குற் பயம்பினில்வீழ்ந்து
பத்தியுமருண்டு தத்தளித்துழன்று
ஞானோர்கரதல மாறூர்களிறென
வீணேகலங்கு மெய்ம்மதியிலர்காள்
மிகத்தவமியற்றிய வகத்தியமுனிக்கொரு
பொருளினையோதிய திருவருள் வாரிதி
வானவர்புகழத் தானவர்படைகளை
வென்றுமீண்டெழிழ்ந் தன்றுகோட்டிக்குந்த
தணிவறுசுடரொறி மணி முடிசூட்டிய
முருகன்சிவசண் முகசரவணபவன்
சங்கினமுயிர்த்த தரளக்குப்பைபாய்ப்
பானவாய்ச்செங்காற் பசிப்பொருந்திடு
கன்னிறந்நாவி யன்னமுகக்குருகுந்
தற்சினையாமென நெஞ்சினுளோர்ந்து
வந்தடைகிடக்குஞ் சுந்தரச்செழுநீர்க்
கழனிகள் சூழ்ந்த பழனியங்கிரிவாழ்
போதசொரூப புனிதன்றனதிரு
பாதபங்கயத்தைப் பணிவீராயின்
அகிலதலத்தினி லரும்பிணியின்றிச்
சகலவெறுக்கையுந் தாம்பெற்றமர்ந்து
பின்புசுவர்க்கப் பெருநகரெய்தி
யங்குளபோக மெலாமனுபவித்து
மாலோன்பிரமனும் வாழ்த்த
மேலாம்பதத்தினில் வீற்றிருப்பீரே. கஉ

### வெண்பா.

பீரமருமானலத்த பெட்புமுலையம்பிகைசின்
காரமருமானலத்த கம்பொருதன்—சீரடியை
வந்திதநவத்தவிர்வான் வாழ்த்துநர்மனத்துறைப்
யந்தித்தகைத்தவிர்வா னால். கங

கலித்துறை.

ஆலந்திருக்குமரா வல்குறுங்கொடி தானவிர்த்ர
சாலத்திருக்குமரா கழுஞ்சேர்பெண்கடப் பமைவிட்டுச்
சீலத்திருக்குமரா முருகாநெறி செப்புமறை
மூலத்திருக்குமரா வணியாயென முன்னுநெஞ்சே. ௧௨

விருத்தம்.

சேவினைவெறுத்து வேலினைச்செறுத்துச் செறிவிடத்தினுங்கறுகறுத்துச்
செவ்வரிபரந்து வெவ்வினைசுரந்து சித்தர்தமனந்தையுங்கரந்து
கோலமைநீட்டிக் காலனைவாட்டிக் குலவியமதர்விழிகாட்டிக்
கொணையுமுடித்துச் சேணடதுபிடித்துக் குயில்பொருமினியசொற்படித்து
மாலைகளேய்ந்து மேலெழில்வாய்ந்து வருமடவாரதமைத்தோய்ந்து
மறந்தருநீது பிறந்திலையாது மகிழ்வுறவருள்செயிப்போது
காலைகடோறுஞ் சோலையினூறுங் கவ்வையாற்பயிரவளமீறுங்
கழனிகள்சூழும் பழனியில்வாழுங் கர்த்தனே நித்யகாரணனே. ௧௩

அகவல்.

சேமிகன்புடைசூழ் பூமியின்மீதே
யன்னைதன்வயிற்றிற றன்னியசருவாய்ப்
பகருமுன்னூறு பகலசென்றதற்பின்
பிறந்துடனவ்வுழி சிறந்திடுமுறவோ
ரனையோரொடேந்துச் சேனைவாய்ப்புகட்டி
மாதிடம்பெறவே சோதிடம்வினவி
மனமதமகிழத் தனயமிர்தருந்தித்
தவழ்ந்துநடந்து தான்விளையாடி
யற்புதமழலைச் சொற்பலபயின்று
சிறுவொரொடுகூடி நறுமலர்சூடிக்
கலனுடையணிந்து கலைசிலதெரிந்து
வாலிபவயதாய் மதன்கணைதொடாக்
காமங்கனிந்து கலவிடைநினைந்து
கொலைகுடியிருந்த விலைமடந்தையர்த
பனைதொறும்புகுந்தவர் மடிவிடைவீழ்ந்து
பொருள்புயவலிகண மருமைதனிளமையும்
வறிதேயிழந்து மதியினைமறந்து
சின்னாட்சென்னைகள் செய்தலைந்துழன்று
மூப்பினிலுயர்ந்து முக்காற்படைத்து
நரைத்துடறளர்ந்து நடுக்கமுற்றொல்கி
யிருமலிளைப்புப் பொருமலாலுலைந்து
தாழ்வாய்வலைந்து போழ்வாய்டாகிப்
பொருந்தியவினையால் வருந்திடுமிந்தப்

பொய்யுடைவாழ்வை மெய்யெனவிரும்பி
யுனதடியேனு முளமெலியாம
லின்பநல்லறிவை யெனக்கருள்புரிந்தே
யனுதினமெளனநீ யாள்வாய்
மனுமுறைவழாத மௌனசற்குருவே. ௧௬

வெண்பா.

வேலாவலையமன மின்னாமாறீர்த்தருள்கூர்
வேலாவலையமன மின்னுசெங்கை—மாலும்
விழுத்தவரும்வள்ளிதலை மென்மலர்வந்தோனும்
வழுத்தவரும்வள்ளிதலை வா. ௧௭

கலித்துறை.

தலைவனமலை புதல்வன்பவளத் தடஞ்சடையின்
றலைவனமலை யாற்குட்பொருள்சொலுஞ் சற்குருநி
தலைவனமலை முலைவள்ளியன்பன்பொற் றுணம்மைக்கா
தலைவனமலை வருநிரலைவத்துத் தவஞ்செய்நெஞ்சே. ௧௮

விருத்தம்.

சேதனப்பொருட்டே டமறந்துநெஞ்
சேதனப்பொருட்டே செலினென்வரு
மாதரச்சமவேலனை வாழ்த்தியா
மாதரச்சமவாவை விட்டுய்யவே. ௧௯

அகவல்.

வேரிசூழ்பங்கய மென்முகமலர்ந்து
காரிதழ்க்குவளையங் கண்ணிணைவிழித்து
நடமிருநறவ வெயர்வதுசொரிந்தங்
கெழுந்தனவன்னக் கொழுஞ்செவிகுலுக்கி
யழுதமீதூறிய குமுதவாய்பொருந்தித்
தண்ணுறுதரள வெண்ணகைதிருந்திப்
புனறுங்குமிழிக் கனதனம்படைத்து
வந்தடர்சைவலக் கொந்தளமலைய
நந்தெனுந்தூய கந்தரமார்ப்ப
மற்றொருபூங்கொடிச் சிற்றிடையொசியச்
சிறந்திடுசிறையனம் பறந்திரிதருமொலி
சிலம்பெனவிளங்க நலம்பெறுகணவர்தக்
தடம்புயமருவிய மடந்தையர்நிகர்க்கும்
வாவிசேர்சிவகிரி மேவிவாழ்குருபர
நாதவிநோதமெய்ப் போதசொருபா
துன்னுமிவ்வுலகினின் மன்னுபல்லுயிர்க்குங்
கடாக்ஷமுற்றதவும் சடாக்ஷரப்பொருளே

தொடர்பவதுன்பக் கடலிடைவீழ்ந்து
கரைகாணுமற் கலங்கிவருந்துமிந்
நாயேன்றனக்கு நல்வழிகாட்டித்
தாழ்மனந்தேற்றி யூழ்வினைமாற்றி
நிதமுனைபோற்றி நினைய
மதிகொடுத்தருள்வாய் வள்ளிமோகனனே. உ0

வெண்பா.

மோகமடமாதர் முதுமயல்விட்டுய்யநெஞ்சே
மாகமடமாதர் மருகனிகழ்—வாகியமுப்
பாதகமலம் பவமிகந்தோர் பாலுறைவேள்
பாதகமலம் பணி. உக

கலித்துறை.

சமலத்தனத்தன கந்தீர்த்தநாதன் கடற்றுயின்ற
வமலைதனத்தன மென்கந்தரவள்ளி யன்பனன்பர்
விமலத்தனத்தன லார்புன்மயலில் விழார்வினைதங்
குமலத்தனத்தன நாலைசெல்லார்கதி கூடுவரே. உஉ

விருத்தம்.

உரத்தானைப் புயல்வணன்செல்வரத்தானை மிகுத்தபுகழ்வளர்வேலான
நரத்தானைக் குலைமெய்ச்சுந்தரத்தானைக் கமலமெனத்தயங்கிராறு
கரத்தானைப் பிறைநூழ்சேகரத்தானைக் கிளையானைக்கருணைசேர்சேத்
திரத்தானைச் சடாக்ஷரமந்திரத்தானைப் பணிந்துவினைதீர்ப்பாய்நெஞ்சே. உ௩

அகவல்.

சேணுறுபொரியரைத் தேமாங்கனியும்
பெட்புடைவருக்கையின் முட்புறக்கனியு
நிரம்பியவிரிதலை யரம்பைமென்கனியுந்
தாமேபழுத்துதீ ததும்பிப்பொழிதரு
மாமதுவேதன் மும்மதமாக
விரும்பிசைமிடற்றுச் சுரும்பினமணிகொடு
படர்ந்துளதோற்ற மிடங்கணியாகச்
சோகவெம்மிடியெனும் பாகனையெறிந்து
செழுங்கதிர்க்கற்றையஞ் சீகரமலைத்து
விடாப்பெருங்கைமுக படாத்தினிலடக்கு
பூமகடன்களி றுமெனவிளங்கும்
வயல்சூழ்பழனி மலையில்வீற்றிருக்கு
மருமறைப்பொருளே யடியர்கண்மணியே
யின்பமேவிளைந்த வினியசெங்கரும்பே
மலைத்தவின்னவர்வினை தொலைத்தான்மருந்தே
துதிப்பவர்மனத்தினு ளுதிக்குமெய்ச்சுடரே

மருவுகுஞ்சரிக்கு வாய்த்ததெள்ளமுதே
தினமுமுனது திருவருள்புரிந்து
தமியேனைகவலை தணிப்பாய்
கமழ்பூங்கடம்பணி கனகதிண்புயனே. உ௪

வெண்பா.

புயலனையமேனிப் புனிதன்படைக்குஞ்
செயலனையமேனித் தியர்க்குந்—துயாதவிர்த்த
தேவாசுகந்தந் திடமபுனைமார்பாமயின்மீ
தேவாசுகந்தந் திட உ௫

கலித்துறை.

திடத்தானவரச லத்தையும்வாட்டிவெண் சீற்றமதோற்
கடத்தானவரச னுக்கருள்செய்த கனகொடிக்குக்
குடத்தானவரச வேழமென்சொல்வள்ளி கோனருடம்
மிடத்தானவரச னிக்குரறகூற்றையு மெத்துவரே உ௬

விருத்தம்

துவரனையவிதழமிர்த வசனவனிதையர்சிறிய சுகசலதியிடைவிடுவையோ
பவமருவுகயவர்மிசை தினமுமதுரிதமொழுகு பலகவிதைசொலவிடுவையோ
தவமுனிவர்பரவியநின் மலரடியையடிமைமதி தனினிறுவவருள்புரிவையோ
வுவமையறுமுனதுதிரு வுளமகிமையெவரறிவ ருலகுபுகழ்பரமகுருவே. உ௭

அகவல்.

குருமணிகொழித்து வருமணிநெடுந்திரை
மொய்த்தபாற்கடலிடை மெய்த்துயிலகூர்ந்த
மான்மகபதிதிரு நான்முகன்முதலா
மெண்ணருமிமையவ ருண்ணிறைமகிழ்வொடு
பரவிநெருங்கிப் பணியுந்தோறும்
வயங்கியபைம்பொன் மகுடந்தோய்ந்துந்
தண்டைகிண்கிணிசிறுசதங்கைநூபுரங்கள்
சிலம்புறவணிந்தும் புலன்களைந்துயர்ந்த
நேசர்மென்மலரால் பூசனைபுரிந்துஞ்
சிவந்தநின்பாத திவ்யதாமரையை
மனத்தினுளிருத்தி வாழ்த்த
வெனக்கருள்புரிவா யின்பநாயகனே. உ௮

வெண்பா.

நேமிகுந்த மாதிகொண்டுநேரொழிந்த சூலைவென்று
தேமிகுந்த லையும்பர் சிர்புரந்த—சாமியெங்கள்
சோதிவேல் திலங்குகன் செழும்பதங்க ணம்புகின்ற
புந்தியன்பர் தமபவங்கள் போம். உ௯

### கலித்துறை.

பவங்களை நோயு றணுகாதுவஞ்சம் படர்ந்தமது
பவங்களை லார்கொங்கம் பாசனுசெல்லாது பைந்தேன்கனிரம்
பயங்களை மாசெய் விளையும்பழனிய பரனருளின்
பவங்களை னீன்ற குகன்றனமனத்துள்வைப் பாரகத்தே. ௩௦

### விருத்தம்.

சத்துசிவாசகதுரவு முத்துகள்கொழித்தலை கடற்புவிதனிற்கருதிகா
ணா, நியமுனைத்துதி செயச்செயவொரற்பமு நினைத்தனையிலைத்தருமமா
அந்தர்மகிழ்வுற்றினிய புத்திரர்வருத்தம தகற்றுதல்வழக்கமலவோ
எததனைவிதத்தினி லுழைபயினும்வெறுப்பினொ டிருப்பதென்மலைக்குமரனே.

### அகவல்.

மலைக்குமனத்தைதயோர் நிலைக்குணிறுத்திக்
களபசந்தனமணி புளகமந்தாமுலைக்
கயல்விழிமடவார் மயலினையொருவிப்
புவிபொருள்வெறுத்துப் பொய்கொலையிகழ்ந்தே
யுலர்தருசருகொடு பலகனிநுகர்ந்தைம்
புலன்களைமுனிந்துயர் நலம்பெறுதவஞ்செயு
மிருடிகள்பரவுங் கருணையங்கடலே
ஞானபரைவளர்க்கு மின்பமாமுதலே
யெங்கணுநிறைந்த துங்கபூரணனே
அருணகிரிக்குமுன் பரகதிகொடுத்தா
யப்பராநெடுஞ்சடை முப்பராந்தகற்கு
மந்திரமிருந்த வகத்தியமுனிக்குங்
கருதருமுண்மைப் பொருளினைமொழிந்தாய்
திடத்தமிழ்வலவற் றொடர்ந்துயர்தீர்த்தாய்
வரிசிலைறையறுக லிகிகுலமமர்ந்து
கடிகமழ்பொன்னிறப் பொடியிடைதோய்ந்தங்
கிளமுலையவிழ்ந்த விளரிகள்படித்துத்
துளிமதுவருந்திக் களிசிறந்துறங்கு
மெழிலார்கற்பகப் பொழில்சூழுலகின்
மேவியசுரர்க்குத் தீவினைதவிர்த்தாய்
நிதநிதமுனது பதமலர்பணியு
மடிமையையான்வ தரிதோ
வடிவுறுமான்மகள் மருவுகாதலனே. ௩௨

### வெண்பா.

தலமந்தாரந்திகைக்குந் தானயமுற்றோங்க
வலமந்தாரந்திகைக்கும் வண்டோட்—கொலையவுணர்
மெத்தமலைத்தேவெருவ வென்றோயமாதவர்பூ
சித்தமலைத்தே சிகா. ௩௩

### கலித்துறை.

காதலங்கார முலைமறைத்தேவிழி காட்டிவருந்
தீதலங்கார நகையார்வலையினுட் சிக்குவரோ
போதலங்கார மறையோனைக்குட்டிய பொற்கரத்தான்
மாதலங்கார கல்வானெங்கணுந்திகழ் வானவரே.

### விருத்தம்.

வானமதிப்பிறை வார்பவளச்சடை மாவிமலற்குமுனுண்
ஞானமொழித்திற னேசியசற்குரு நாதவினைத்தொடர்பா
வினர்தமைப்புக ழாமலுனைத்தொழ வேழைமனத்துயரீ
தானதொழித்து விவேகமெனக்கரு ளாதிமறைப்பொருளே. ௩௫

### அகவல்.

பொருளிதென்றறியாப் புன்மையேன்மனத்து
விருளினையகற்றி யின்பமெய்ஞ்ஞானத்
திருவிளக்கேற்றித் தினமுமஃதிலங்கநின்
னருளெனுநெய்வார்த் தவ்வுழிவந்து
குடியிருந்தென்னை யடிமைகொண்டான்மா
யககரியம்புலி யறுகுமணிந்து
மணியசன மறை மாறொருபுறந்தழீஇச்
சிகிகலைசேர்ந்திச் சிவனறனைப்போன்றும்
வளையுந்திகிரியு மருவுதலானு
நெடுந்தவர்கண்டக நெருங்குதலானும்
வனமெ னலானு மாலெனவிளங்கு
மெணகணியங்குற விருகைகலைபினங்கை
வாழவாரணம வளரப்பாரித்
தனனமுயாதவேதான றன்னோரிகாதநாங்
கோகிலமொலிப்பக் கொழுமபலந்தாங்கி
மகிழ்வேய்ந்ததனன் மதனனைசேர்ந்துந்
தகுகுருகாடத தகரமாமேற்சொண
டெத்தண்டமுந்தொட் டென்றனைபபோன்று
மிலகியபழனி மலைதனிலுறையு
நித்தியானந்த நிமலசொரூபா
வுத்தியானத்தோ டெழுகொந்தளக
திறல்வடிவேற்கட் குறமகள்புளகக்
களபமென்முலைதோய் கனகதடமய
துங்கமனோகர மங்களவேலவா
சிறைவரிச்சரும்பர் நிறைமதுவருந்திய
பராகம்பூசி விராகம்பாடிக

கணங்கொபேயில்லைப் கடம்பின்
மணங்கமழ்தொடைபுரண் மார்பசுந்தரனே. ௰௬

வெண்பா.

தாங்கவலைமாறவரந் தந்துலங்குவானோர்
தராங்கவலைமாறவரந் தந்து—புரந்தவனோர்
கன்றுமறவா கவந்தொலைத்தோன் றன்னைநெஞ்சே
யென்றுமறவா திரு. ௰௭

கலித்துறை.

இருதனந்தந்தமி ழோர்சிமிழ்கண்கணை யின்பாடை
மிருதனந்தந்தமி சைசந்ரமுத்தம்பொரு வேசையர்பால்
வருதனந்தாதமி கைப்பிணிதேடு மயலகற்றிக்
கருதலந்தந்தமிழ் கற்பித்தருள்சுரர் காவலனே. ௰௮

விருத்தம்.

காவலருமலர்மதுவுண் டளிகள்பாடக்
களித்துமயினடிக்கவன்னங் கருதிநோக்கு
மாவளஞ்சூழ்பழனிமலை முருகாசற்று
மனமிரங்காவகையேது வாதோருதோ
பாவிவழுத்துதல்செவிகேளாதோவொன்றும்
பகராயோவுனக்குமெற்கும் பகைமுன்னுண்டோ
நீவருதற்கிதுதலையோ தருமந்தானோ
நின்கருணைமதுரிதமே நிறைந்ததேனே. ௰௯

அகவல்.

தேனினமூரன்று செழுமதுவருந்துங்
கானமர்சினைமலர்க் கத்திகையிலைந்து
தனியகிற்புகையுந் தகரமுமளைந்து
பனுகுமான்மதமும்பொலிவுறநீவிக்
கொண்டலுந்தெண்டிரை கொழித்ததென்னறலும்
விண்டொடுபொழிலும் வெள்கநெய்த்தொழுகி
நிறையிருள்வளர்ந்த நீள்கருங்குழலுங்
கறையிகந்தவிர்பிறை சிறைகிடந்தனைய
திருநுதலுந்தின் சிலையெனவளைந்த
புருவமுமறலி போற்கொலைபயின்று
திறத்தவேற்படையினை வெறுத்துமைதோய்ந்திரு
புறத்தினுந்தாவிப் பொருவரிவிழியுங்
குமிழமென்மலரெனக் குலவியமூக்கு
மமர்செயுமதன்ற னழகுநோக்குதற்குத்
தொகுத்தகான்மறையோன் றொல்லைநாளதனில்
வகுத்ததர்ப்பணமென வயங்குகபோலமும்

வள்ளைவார்செவியும் வனமுருக்கெழுங்
கள்ளவிழாம்பற் கவினுறுவாயுந்
தண்ணிலவெரிக்குந் தாளவெண்ணகையும்
பண்ணினுமதுரப் பசுங்கிளிமொழியும்
விழுமியகிரண முழுமதிமுகமும்
வழுவகல்வளைபோல் வாய்ந்தகந்தரமுங்
கரும்பெனத்திரண்ட கனதடப்புயமுந்
திருந்துமம்புயத்தைச் செற்றிடைவீழ்த்திக்
கடகமுஞ்சரியுங் கனககங்கணமுஞ்
சுடர்மணிபதித்த தொடியுமீதணிந்த
கரமும்பவளக் கடிகையிற்சிறந்த
விரலுஞ்சிகர மேருவைச்சினந்தெண்
பொருப்பினோடெதிர்ந்து புகர்முகவேழ
மருப்பினைக்கடிந்து வாகைகொண்டமிர்த
குடத்தினைப்பழித்துக் குவிந்தடிபரந்து
புடைத்திறுமாந்து பூரித்தெழுந்தங்
கிடங்கொடுதழப்பி யிணங்கியசுணங்கு
படர்ந்துமாதவத்தினர் பலருமயங்க
முலைகறுகறுத்து முதிர்ந்தசெஞ்சாந்து
பனிநீர்களபம் படீரந்திமிர்ந்து
வாரணியணிந்து மகரயாழனைத்த
பூரணமோக புளகிதமுலையு
மெறும்பினதொழுக்கென விசைத்தவுரோமமு
நறும்புனற்சுழிநிகர் நலங்கொளுந்தியு
மிளைஞர்தம்மனஞ்சென் றேறுதற்கமைத்த
வளமிகுபடியென மருவியமடிப்பு
மாவிளந்தளிரினு மழகியவுதரமு
நூலினுமெலிந்து நுடங்குசிற்றிடையும்
புடைவைதாங்கிப் புடையகன்றரவின்
படநிகர்த்திலைழகள் பயில்கடிதடமும்
நயந்தவரம்பையை நகைத்துயர்தொடையும்
வியன்சினைவராலெனு மென்கணைக்காலு
மணிச்சமலமா யணுக்கியசோகந்
தனைக்கெடுத்துமாந் தளிரினைவாட்டிச்
செய்யபஞ்சூட்டிச் சில்லரிச்சிலம்புந்
துய்யகிண்கிணியுந் தொனித்தபொற்பதமு
மன்னநன்னடையு மின்னலினியலுந்
துன்னியவஞ்சத் தொழிலுமாயமும்

பெற்றுவிளங்கிய பெண்களைவிரும்பிப்
பற்றியமயலாற் பரிதவித்துழன்றுல
காலைகடோறுங் கனல்வினைத்தெரியும்
பாலையேபோன்ற லீலையிலவீழ்ந்துஞ்
சீலமையிகழ்ந்துந் தீயமைப்புகழ்ந்துஞ்
சாலவருந்தித் தளர்ந்தலையாம
லுன்றனைக்கருதி யுவந்துபேரின்பத்
தென்றமிழ்பாடிநின் சேவடிபரவி
வந்தனைபுரிய மதியெனக்கருளிச்
சிந்தைவெங்கவலை தீர்த்தெனையாள்வாய்
பழனபுரிவாழ் பரமசொரூபா
குழகாபுனித குமரசடாட்சர
முதல்வாசிவசன் முகசரவணபவ
சதுர்மாமறைமுடி தனிலுறைகுருபர
தெய்வகுஞ்சரிபுணர் திவ்யவிநோதா
சைவமென்பெயருடைச் சமயவானந்த
மோனகெம்பீர முழுமெய்ஞ்
ஞானதண்டாயுத நாதாவிளக்கே. ௨௦

வாழி விருத்தம்.

முருகன்வாழிநிமலவேத முதல்வன்வாழிமோனமே
கருதும்யோகர்மனதின்மேவு கமலபாதன்வாழிசீர்
தருகலாபமயிலும்வாழி சமரவேலும்வாழிமான்
மருகன்வாழிபழனிஞான வரதன்வாழிவாழியே.

வேறு.

அருணவொண்சடை முடியில்வெம்பணி யவிர்செழும்பிறை சூடுமோர்
பரமர்தஞ்செவி தனிலரும்பொருள் பகருமிங்கிதன் வாழிநீள்
கருணைதங்கிய நயனபங்கய கனகதிண்புயன் வாழிவான்
டருவமங்கையர் தொழவருங்குற வனிதைகுஞ்சரி வாழியே.

பழனி நான்மணி மாலை

(முற்றிற்று.)

கடவுள் துணை

பழநாபுரி

ம-ா-ா-ஸ்ரீ கனம் பொருந்திய

மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்களாலியற்றிய

# திருப்பழனி வெண்பா.

காப்பு—வெண்பா.

திருமேவும்பைந்துளபத் தேனலங்கன்மார்பன்
மருகோன்பழனிவெண்பா மாலைக்—கொருமாரன்
கைக்குஞ்சரமுகத்தான் கட்டழலுய்த்தானருள்செங்
கைக்குஞ்சரமுகத்தான் காப்பு.

நூல்.

மின்னார்வெண்மாமதியும் வெங்கதிரோனுந்தொழுது
பன்னாளுமேத்தும் பழனியே—யொன்னார்
மனந்தமொறக்கரத்தார் வைவேலாற்பண்டு
சினந்தமொரக்கரத்தார் சேர்பு ௧

அம்முகில்விண்மானனைகயொத் தாழியுண்டன்னான்குழல்போற்
பம்மிமழைபெய்யும் பழனியே—செம்மைமிலை
காட்டுங்கருத்துடையார் காடோறம்வஞ்சர்தமை
வாட்டுங்கருத்துடையார் வாழ்வு. ௨

மாலருவிவீழ்வதுபூ மாதேவ்வுயிர்க்குமுலைப்
பாலருள்வதொக்கும் பழனியே—கோலவரிப்
புள்ளமருந்தாமமலர் பொற்புயத்தார்முற்பவத்தைத்
தள்ளமருந்தாமமலர் சார்பு. ௩

வாய்ந்தமலைவெள்ளகல்லோர் வண்புகழ்போலோங்கியெங்கும்
பாய்ந்துதிரம்பும் பழனியே—யாய்ந்துதொழா
வஞ்சத்திருக்குமத்தர் வன்பிணிதீராரடியார்
நெஞ்சத்திருக்குமத்தர் நேர்வு. ௪

வார்தடத்தாறுந்தியபன் மாமணிவான்விற்கெதிர்விற்
பார்பிடித்ததொக்கும் பழனியே—போர்விளைக்குஞ்
செங்கட்குறவர் திருக்குலமானன்பரன்பர்
தங்கட்குறவர் தலம். ௫

சத்தபுனலார்ப்புமன்னர் தாமுழுமார்ப்புந்திசையோர்
பத்திநிறைந்தோங்கும் பழனியே—முத்தருளந்
தங்கவருமாதரத்தார் தானவர்தமாவிமுழு
துங்கவருமாதரத்தார் தோய்வு. ௬

கூடிகயரோறுமணி கொண்டிறைப்பதென்னமன்னர்
பாடிவினோதுற்றும் பழனியே—தேடிமிக
வீறானனத்தார் விபுதர்கமலத்தர்புக
ழாறானனத்தா ரகம். ௭

வண்ணமேமேஞ்சோலைமலர் வாய்விண்டுமிழ்ந்தசெந்தேன்
பண்ணைதொறும்பாயும பழனியே—விண்ணவர்கு
ழாறுபடைவீட்டினு ரன்றவுணர்கொண்டவஞ்ச
மாறுபடைவீட்டினார் வாழ்வு. ௮

வெள்ளக்கடைசியர்கான் மென்களங்கண்டாமைநந்து
பள்ளத்தொளிக்கும் பழனியே—யுள்ளத்தின்
மோனங்குறையா ரூனேவருவாசபாவிகள்பாற்
றானங்குறையார் தலம். ௯

மாவயனீர்தோய்கடைசி மார்நிழலைமள்ளர்புனற்
பாவையையொன்றேத்தும் பழனியே—பூவயன்மால்
யோகமுனிவோ ருளமகிழத்தானவர்து
ளாகமுனிவோ ரகம். ௰

கொங்கவிழ்பூம்பண்ணைநல்லோர் கொண்டநிறைசெல்வமெனப்
பைங்கதிர்பெற்றோங்கும் பழனியே—பொங்குமொளி
நங்கானனங்களைந்தார் நந்தகந்தரன்பர்பந்த
வெங்கானனங்களைந்தார் வீடு. ௧௧

மிக்கசெற்கொய்தேதொழுவர் வேய்ந்துளபோர்பல்கிரியோற்
பக்கமெலாந்தோன்றும் பழனியே—தக்கபொரு
ளொன்றதுகண்டங்கறுத்தார்க் கோதினாவெஞ்சூர்மரமாய்
நின்றதுகண்டங்கறுத்தார் நேர்வு. ௧௨

சீரொருமையேற்றுற் றெளிக்குசெற்போர்கார்தவழ்பொற்
பாரவரைசேரும் பழனியே—வீர
மடுத்துவருமயிலா ரன்றுகிரவுஞ்ச
நடுத்துவருமயிலார் நாடு. ௧௩

சொற்பழதுதீர்த்திரப்போர் துன்பறத்தஞ்சகட்டார்
பற்பலர்வீட்டேய்க்கும் பழனியே—பொற்பதுமக்
கைக்கும்பதனத்தார் காதலில்வீழாமலெனை
வைக்கும்பதனத்தார் வாழ்வு. ௧௪

செங்கயல்வாட்கண்ணார் திருமணிமாடங்கடோறும்
பங்கயமான்மேவும் பழனியே—துங்கவுல
செல்லாமதிக்குமர னீன்றசுதன்வஞ்சகர்பாற்
செல்லாமதிக்குமரன் சேர்பு. கரு

திங்கடபிறைபொழின்மேற் சேர்தொறுங்கொக்கென்றுகெண்டை
பங்கந்தாவிக்கும் பழனியே—தங்கத்த
மைக்குஞ்சரிகொழுநன் மாமணியின்றுந்தொடிசூழ்
கைக்குஞ்சரிகொழுநன் காப்பு. கசு

ஆடலரங்காண மலர்தேன்பொழியவண்டு
பாடமயிலாடும் பழனியே—காடரிய
வேதங்கடந்தார் விரிகடலுண்டோற்கினிய
போதங்கடந்தார் புரம். கஎ

வீறியபூக்கனிகள் வீழப்புனல்வாவி
பாறிமுகில்சீறும் பழனியே—பேறினிய
பத்திவரத்தோரகத்தார் பைந்தமிழ்வல்லோர்பரவுஞ்
சித்திவரந்தோரகத்தார் சேர்பு. கஅ

தண்டரளமுத்தந் தனைக்கருவென்றோதிமங்கள்
பண்பிறநோக்கும் பழனியே—வண்பிழைக
டராத்துதிர்த்தாவந்தார் சிந்தைதனில்வாழ்பரமன்
றூராத்துதித்துவந்தார் சார்பு. ககூ

கோட்டகமார்தாய்முகிழ்மென் கொங்கைமுகமலர்ந்து
பாட்டளிகட்கூட்டும் பழனியே—பூட்கென
வட்டவிரதத்திருந்தார் வாடமுனிந்தாரடியா
ரிட்டவிரதத்திருந்தா ரில். உ0

வில்லெடுத்தவேளை விளிப்பதுபோற்சூதமெல்லாம்
பல்லவக்கைகாட்டும் பழனியே—செல்வமுற்று
வாழும்பரங்கிரியான் மண்ணளந்தோனும்பணிந்து
சூழும்பரங்கிரியான் றேய்வு. உக

சேணகழிற்கெண்டைபுவி சீறிவிண்ணின்மேல்விரைத்த
பாணமெனத்தாவும் பழனியே—பூணுவரை
யாரத்தலைமவா னளகவள்ளிகும்பதன
பாரத்தலைமவான் பதி. உஉ

காந்துகதிரைத்திருமால் கைத்திகிரியென்றிடங்கர்
பாந்துபரிகஞ்சூழ் பழனியே—யேந்துமுலைக்
கோட்டமராமானார் குழாம்பணிவள்ளிக்காக
நீட்டமராமானார் நிலைவு. உங

இச்சைமடவார்குழற்கூட் டின்புகைகளொன்றகுன்றிற்
பச்சைமயிலாமெம் பழனியே—வச்சிரற்கு
விண்ணளித்தாரம்புயத்தார் வேதன்சிறைதவிர்த்தார்
பெண்ணளித்தாரம்புயத்தார் பற்று. உச

வான்மணிமாடங்களிற்கார் மால்பாற்கடலமர்ந்த
பான்மையெனமேவும் பழனியே—மேன்மைதரு
போதமுடிவானோர் புனிதருங்காணுத்தரியா
நீதமுடிவானோர்செறிவு. உரு

வேறு.

வெய்யவனுற்காய்ந்தகொந்த வெப்பகற்றல்போற்கொடிகள்
வையமதிதோயும் பழனியே—பொய்யறவர்ச்
சித்தஞ்சலிப்பார் திருக்கறுப்பார்வஞ்சனெனிற்
சித்தஞ்சலிப்பார் செறிவு. உசு

வார்த்துணைமென்கொங்கைநல்லார் வான்சிலைகொண்மாமுகத்தைப்
பார்த்துமதியஞ்சும் பழனியே—கூர்த்தகழை
வாய்த்தகரவாகனத்தான் வண்மறைகூறும்பவள
வாய்த்தகரவாகனத்தான் வாழ்வு. உஎ

பூமணமுமின்னார் புனுகுமணமும்புலவோர்
பாமணமும்வீசும பழனியே—நேமமொடு
வாரமிசையும்பெருமான் மானுநிறத்தோன்பரவ
வாரமிசையும்பெருமான் வாழ்வு. உஅ

பூங்குயில்கேட்பச்சுகமும் பூவையுமாறங்கமுறை
பாங்குபெறவோதும் பழனியே—யோங்குங்
கனகமயக்கோட்டுவோர் கற்பகநாடாளெங்
கனகமயக்கோட்டுவோர் காப்பு. உகூ

ஏடலர்ந்தபூந்தா ளிறைமறுகெலாங்கயங்கள்
பாடலங்களார்க்கும் பழனியே—நீடுமின்ப
வான்மலைமாதங்கத்தான் வண்கனிக்காப்பூவலஞ்செய்
வான்மலைமாதங்கத்தான் வாழ்வு. கூ0

வெவ்வடிவாய்வேல்வேந்தர் வீதிதொறுமாமுரசம்
பவ்வமெனவார்க்கும் பழனியே—செவ்வியசீ
ருள்ளமுருகா னுறுதியிலாதார்க்கருள்சே
ருள்ளமுருகா னுறைவு. கூக

வேணிமுனிவோருமயன் மீறமடவாரினிய
பாணிபலபாடும் பழனியே—சேணிமிர்பூஞ்
செய்யவிளங்கற்பகத்தான் றேவர்புடைசூழ்ந்துதுதி
செய்யவிளங்கற்பகத்தான் சேர்பு. கூஉ

ஆசையொடுகேட்பினுங்கண் டாலுந்துதித்திடினும்
பாசவினைதீர்க்கும் பழனியே—நேசருளத்
தென்றுமொழியா ரிகழ்படிறர்க்குட்பொருளீ
தென்றுமொழியா ரிருப்பு. ௩௩

வஞ்சநெடும்பாவ மயக்கையெல்லாந்தீயினிட்ட
பஞ்செனவேசெய்யும் பழனியே—குஞ்சரமோர்
வேலைமுனைமேவினார் மெய்யுறழ்முன்னீர்சுவற
வேலைமுனைமேவினார் வீடு. ௩௪

புத்தியிலராயிருந்த போதினுங்கண்டாலுடனே
பத்தியையுண்டாக்கும் பழனியே—முத்திதருந்
தாரகவிநாயகனார் தந்துணைவர்மெய்யருள்வித்
தாரகவிநாயகனார் சார்பு. ௩௫

ஆர்வமிகுத்தேபரவு மன்பர்கட்குமெய்ஞ்ஞானப்
பார்வைகொடுத்தாளும் பழனியே—போர்வடிவேற்
கையான்மலைவில்லான் காதலனென்மீதுமனங்
கையான்மலைவில்லான் காப்பு. ௩௬

வண்டேற்றபூமாதுநில மங்கைகதிர்வான்பசுவும்
பண்டொழுதேத்தும் பழனியே—தண்டணிசெங்
கைக்குரவணம்பரமன் கன்னிமணாளன்சிகழி
கைக்குரவணம்பரமன் காப்பு. ௩௭

ஏமமலர்கொண்டுபிர மேந்திரனார்முன்முறைதப்
பாமலினிதேத்தும் பழனியே—சேமமறை
யோதிதருமகத்தா னும்பணிவேலன்பருக்கே
யோதிதருமகத்தா னூர். ௩௮

நித்தியநாதன்றன் னினைவுநிறைவேறவிருப்
பத்தொடுபூசிக்கும் பழனியே—சித்தமது
வந்துபொருந்தண்டத்தார் மாற்றலர்வென்னிட்டொழிய
வந்துபொருந்தண்டத்தார் வாழ்வு. ௩௯

சுத்தமதியாளனெனும சொன்னருத்தன்றீமைதனைப்
பத்தனிநின்றேத்தும் பழனியே—நித்தநெறி
யொன்றுதருமங்கலையா ருள்ளுவப்பஞானநிலை
யொன்றுதருமங்கலையா ரூர். ௪௰

மாதவத்தான்மிக்கவஞ்சி மன்னவற்குமுன்புதிறம்
பாதமுத்திநல்கும் பழனியே—போத
வராகவளையான் மறந்தாளைப்பின்செல்
வராகவளையான் மனை. ௪௧

வந்தித்தோரின்பநிலை வாழ்வுபெறவாமிலைந்தும்
பந்தித்தோர்போற்றும் பழனியே—சந்தத்
தருக்கானகமலையான் றன்குருமெய்ஞ்ஞானத்
தருக்கானகமலையான் சார்பு. ௪௨

ஆதரவிதாமென் றடைபவர்க்குச்சிந்தைகுழம்
பாதவலைகதந்தான் பழனியே—வேதநய
சாரமறைவாக்கினான் றண்டமிழ்வேந்தற்குமுன்வி
சாரமறைவாக்கினான் சார்பு. ௪௩

சீராயவேள்வி செயுமிடனெலாம்வேத
பாராயணர்சூழ் பழனியே—பேராசை
சிந்திப்பவந்தபேப்பார் தேவாதிதேவவெனச்
சிந்திப்பவந்தபேப்பார் சேர்வு. ௪௪

காதலைநீந்திக் கதிநகரஞ்சேர்வதற்கோர்
பாதையெனவோங்கும் பழனியே—மோதுதிறன்
மாசுந்தரமாட்டார் மைந்தரடியார்க்கொருமும்
மாசுந்தரமாட்டார் வாழ்வு. ௪௫

மோசவினைவெம்பகைகளை மோதிவெல்லுஞானிகட்கோர்
பாசறையதாகும் பழனியே—பூசித்
தவர்முன்வரமறையான் சந்ததமுநன்மா
தவர்முன்வரமறையான் சார்பு. ௪௬

மைந்தரகலத்தொறும்பொன் மங்கையுறவிந்தைகள
பந்தியிர்தோண்மேவும் பழனியே—சிந்தைநெறி
யன்புங்கவர்கோமா னன்னவர்மாறீர்ந்தோர்கே
யன்புங்கவர்கோமா னர்வு. ௪௭

அஞ்சாசக்கிள்ளையுமா ரூயபருந்துங்களித்தோர்
பஞ்சாத்துண்மேவும் பழனியே—கஞ்சன்
மதமிறவப்போதவித்தான் மாமருகவேடா
மதமிறவப்போதவித்தான் வாழ்வு. ௪௮

உம்பருறையும்பதியு மொப்பலவெனப்பலசு
வம்பரவவாழும் பழனியே—செம்பதுமக்
கந்தவிரும்போதகத்தான் காதலுறமைத்துனன்சோ
கந்தவிரும்போதகத்தான் காப்பு. ௪௯

நீர்மலிமுத்தங்கொழிக்கு நீகேடலாடைபுனை
பார்மகள்கண்போலும் பழனியே—யோர்மும்
மலகவனத்தலைவன் மாலினர்காணுவா
மலகவனத்தலைவன் வாழ்வு. ௫௰

வேறு

செஞ்சுடர்மாடக்கொடியுந் தேறுமன்பாசிந்தையுமின்
பஞ்சிதமேற்றன்னும் பழனியே—விஞ்சகல
லொத்தகுணக்கடலா ரொல்குதிறல்வாருமன்பு
இத்தகுணக்கடலார் சேர்பு. ௫௧

சந்தந்திமிர்முலையார் தாமுந்துறவேரா
பந்தங்கெடுக்கும் பழனியே—சுந்தரஞ்சேர்
மீனத்துவசத்தான் மெய்ப்புகல்விமேய்யிறல
ஞானத்துவசத்தா னூர். ௫௨

வெற்பஞ்சவிம்முகொங்கை வேசையருப்பற்றுநீங்
பற்பஞ்சமைக்கும் பழனியே—முந்போ
தாறுவரம்பற்று ருளத்தருகளமைதாற
மிறுவரம்பற்று ரிருப்பு. ௫௩

சேலடுத்தசெய்யுட் டிரிபகடும்பம்பாருக்
பாரைததமேயும் பழனியே—வாலிதுப்பாய்
கைத்துப்படைத்தார் கனிந்துதந்தோனைச்சிறையில
வைத்துப்படைத்தார் மனை. ௫௪

நேயர்தமைப்பிரிந்த நேரிழையாருமதுறவும்
பாயல்வெறுக்கும் பழனியே—தூயவருட்
போதவானந்தத்தான் பூவயன்மாறேதயறி
யாதவானந்தத்தா னூரவு. ௫௫

முத்தாரக்கொங்கையரு முல்லையிலமாக்களுமின்
பத்தாவைப்போற்றும் பழனியே—கொந்தார
செழுந்தும்பயந்தாரார் தேசிகர்காயேற்குள்
ளழுந்தும்பயந்தாரா ரார்வு. ௫௬

கானம்பயிலளிசூழ் கான்மலரிலுந்தடத்தும்
பானந்திமிரும் பழனியே—தானென்
பதுமாதனத்தார் பரிவுமுறுர்கெஞ்சாம்
பதுமாதனத்தார் பதி. ௫௭

காவகமுந்தூயமஞ்ச காவியங்களானவுந்தேம்
பாவலர்வாசிக்கும் பழனியே—யாவல்
வடிவாகுமாகடம்பர் வாழ்த்துட்கொளார்தேன்
வடிவாகுமாகடம்பர் வாழ்வு. ௫௮

வாணிதத்தையொத்தமொழி மாதரும்யாழ்வல்லவரும்
பாணிதத்தைக்காட்டும் பழனியே—தாணிலைத்தோர்,
தீங்கங்கடத்தழைத்தார் சிந்தூரம்வள்ளிக்காக
வோங்கங்கடத்தழைத்தா ரூர். ௫௯

தேனுலவுபூங்குழலார் சிந்தூரமுங்கன்றினமும்
பானுகரகேரும் பழனியே—வானவர்கோன்
கத்தந்தாங்கத்தான் கைதொழுதேத்துஞ்சதுர்வே
தத்தந்தாங்கத்தான் சார்பு. ௬௦

வெள்ளியபூவாவியினும் வீறுபுலவோர்மனத்தும்
பல்கலையோசிக்கும் பழனியே—செல்வநிறை
வஞ்சிநகரத்திருப்பார் வைப்பதுமமன்னவன்செய்
யுஞ்சிநகோரதிருப்பா ரூர். ௬௧

மானைநிகர்த்தவிழி மங்கையர்சொற்குஞ்செவிக்கும்
பானசுவைமைக்கும் பழனியே—கானமலர்
தானனகரத்தான் தவத்தினுயர்வோர்பணிநா
ரூனனகரத்தா னகம். ௬௨

தண்ணைக்கட்பேதையர்சொற் சாரமும்பூகப்பொழிலும்
பண்ணைசகடுக்கும் பழனியே—விண்ணிற்போங்
கோட்டவிரும்பிலைறவன் கோட்டுமுகத்தாருகனை
வாட்டவிரும்பிறைவன் வாழ்வு. ௬௩

போயவனசத்திரமும் போர்விளையாட்டாடவரும்
பாயசமூட்டும் பழனியே—தூயர்புக
ழட்டதிருமங்கலத்தா ரம்புயப்பொற்பாதமிசை
யிட்டதிருமங்கலத்தா ரில். ௬௪

கோடதேத்தபூம்பொழிலுங் கூறுகல்லோர்நெஞ்சகமும்
பாடலக்காணுறும் பழனியே—நீவேச்ர
வாட்கோகனகத்தான் மார்பிடக்தோனும்பரவுக்
தாட்கோகனகத்தான் சார்பு. ௬௫

வாசங்கமழ்கமல வாவியுமின்னார்புயமும்
பாசம்பிணையும் பழனியே—நேசக்
தரும்போதவாரியனார் தங்குமளிதன்னால்
விரும்போதவாரியனார் வீடு. ௬௬

மேவும்பெரியர் வினையகத்துநாவகத்தும்
பாவம்தவிரும் பழனியே—யாவுக்
தருமஞ்சனத்தார் தவமுனிவோராடுந்
திருமஞ்சனத்தார் செறிவு. ௬௭

கோதையர்பூந்தாள்களினுங் கும்பமுலைமீதுமரும்
பாதசராட்டும் பழனியே—போதகவி
சேட்டெழுமாதவத்தார் தேடமலர்பாவவிரு
ளோடவெழுமாதவத்தா ரூர். ௬௮

காலந்தெரிபவருங் காளையருமந்தகத்தார்
பாலன்பொருவும் பழனியே—ஞாலக்
துதித்தவரத்தர் துணிந்தெனையாளச்சம்
மதித்தவரத்தர் மனை. ௬௯

முல்லைக்கோதண்டவல்லோர் மொய்ம்பினுங்கோவீதியினும்
பல்லக்கூடாடும் பழனியே—மல்லற்கோட்
டோதியறமோதினா ரோங்குமருணகிரிக்
காதியறமோதினா ரார்வு. ௭0

கூருந்தவத்தினருங் கோவுமதிக்கலைப்
பாரங்கடக்கும் பழனியே—வீரத்
தகுவான்முத்தாரத்தான் றன்றுணைவன்மார்பி
னகுவான்முத்தாரத்தா னூர். ௭௧

வீறரசர்வேல்களினு மேவுநெற்போர்நீழலினும்
பாறலமரும் பழனியே—கூறுபொருள்
மாதரவாவான் மயங்காமைதந்தெனக்கோ
ராதரவாவா னகம். ௭௨

தோடவிழ்மென்பூவளிக்குந் தோகையர்நிர்த்தத்தினுக்கும்
பாடலியங்கூட்டும் பழனியே—கேடறுசீர்
மண்டுகலந்தருகன் மாமுலைமான்மாதையங்காட்
கண்டுகலந்தருகன் காப்பு. ௭௩

அஞ்சொன்மடந்தையரும் யாசகருமேற்றகதம்
பஞ்சந்தணியும் பழனியே—செஞ்சுடர்வே
ளீங்காதாரத்தமைந்தார் கேடரியமூவிரண்டா
யோங்காதாரத்தமைந்தா ரூர். ௭௪

ஆர்த்தடர்க்குமல்லருங்கற் றுய்ந்தபொறையாளர்களும்
பார்த்திபத்தைநேரும் பழனியே—சேர்த்துரத்தி
லப்போதுமாதரித்தா ராதிவிண்ணோரியாவரியு
மெப்போதுமாதரித்தா ரில். ௭௫

வேறு.

மங்களமாதங்கியண்ணல் வாழ்ந்திசைமேலோர்குழீஇப்
பைங்கயிலைபோலும் பழனியே—யெங்குமொன்றாய்
நின்றவிருதாரத்தார் நேயத்தொழுவா
னின்றவிருதாரத்தார் நேர்வு. ௭௬

மாலைசெறிந்தத்தியா வந்திகழ்ந்தாரங்கொடுகா
பாவிமுடிபோலும் பழனியே—தாலமிசைச்
சேனைமயக்கார் தொழுங்குழலார்பாலேமைழ
யேனைமயக்கா ரிருப்பு. ௭௭

வண்ணவயன்மொய்கதிர்கள் வாழ்ந்தமுதவேரிகொண்டு
பண்ணவர்நாடொக்கும் பழனியே—நண்ணுசிவ
யோகவுருவித்தகத்த ரோங்குகங்கைநற்கீரற்
கேகவுருவித்தகத்த ரார்வு. ௭௮

விஞ்சுபுலவோர்குழுமி வேண்மேடந்தந்துயர்ந்து
பஞ்சதருநேரும் பழனியே—மஞ்சு
விரவுமணியாண்டலையான் வீசுகடன்ஞாலம்
பரவுமணியாண்டலையான் பற்று. ௭௯

மேனுயர்வின்மஞ்சுதழாய் மென்றோகைவாழ்ந்தருட்கோ
பாலனுரம்போலும் பழனியே—நீலநிறத்
தானவரையேற்றார் தவமறந்துளார்தமைமெய்ஞ்
ஞானவரையேற்றார் நகர். ௮௦

மங்காவனம்பொருந்தி மாவாரணம்பயின்று
பங்கேருகனும் பழனியே—கொங்கார்பூஞ்
செச்சையவிராகத்தார் சிந்துரமானைத்தழுவு
நிச்சையவிராகத்தார் நேர்வு. ௮௧

மாசார்ந்தசோடவிர்ந்து வல்லவைமேவுந்திறத்தாற்
பாசாங்குசனும் பழனியே—தேசார்
தருங்கஞ்சமுகத்தார் தார்மருடவானோர்
நெருங்கஞ்சமுகத்தார் நேர்வு. ௮௨

உற்றவிரதப்பலநின் றோயாப்பொறிகடந்து
பற்றனுகார்போலும் பழனியே—முற்றியசீ
ரோங்குமாறங்கத்தா ரோர்பதினெட்டாயகொடேந்
தீங்குமாறங்கத்தார் சேர்பு. ௮௩

துன்றுகங்கைமாவருக்கந் தூயதண்ணங்கொண்டானோர்
பன்றிவரைசாரும் பழனியே—வென்றிநடந்
தானமருந்தோகையினார் தாமவள்ளிதன்னதர
யானமருந்தோகையினார் பற்று. ௮௪

சீர்ப்பெருமான்மெய்தழுவிச் சேண்பொலிந்துகோங்கவனம்
பார்ப்பதிபோலோங்கும் பழனியே—நீர்ப்புவன
வஞ்சமென்பதஞ்சிவந்தார் வைகலும்பூசிப்பதனாற்
கஞ்சமென்பதஞ்சிவந்தார் காப்பு. ௮௫

சாந்தமணியுங்கொம்பூத் தாங்குதலால்வில்வவனம்
பாந்தளிறைபோலும் பழனியே—காந்தி
திகழுங்கனவேலான் சிந்தைதனிற்சற்று
மிகழுங்கனவேலா னில். ௮௬

ஆண்டுசெங்கோன்மேய்மதுரை யார்ந்துமகிழவனம்
பாண்டியனைசேரும் பழனியே—வேண்டி
வழுத்தவிருந்தாரணியார் மாதவர்பொன்னூடர்
வழுத்தவிருந்தாரணியார் வாழ்வு. அஎ

அம்பரவமொய்பலகந் தாமைபெற்றுசெல்லிவனம்
மம்புகடல்போலும் பழனியே—வெம்பொறியோ
ரஞ்சங்களிப்பா ரடியேன்புன்சொற்கவிக்கு
நெஞ்சங்களிப்பார் நிறைவு. அஅ

செய்யவனைமேவியலை சேர்ந்தாருறுஞ்சயனப்
பையரவன்போலும் பழனியே—தையலர்கண்
மைவசமயங்காப்பான் மைப்பொருளன்போர்க்கருள்வான்
சைவசமயங்காப்பான் சார்பு. அகூ

ஆரமணிகொண்டிசைதேர்ந் தங்கலைசூழ்ந்தேதடங்கள்
பாரதிபோல்வாழும் பழனியே—சீருலவு
கந்தமலையான் கருதுமென்றன்றீவினையைச்
சிந்தமலையான் செறிவு. கூ0

மாற்கசமாய்வெள்ளையல வன்கமலைதோன்றிமடுப்
பாற்கடலுமொக்கும் பழனியே—மேற்ககனந்
துன்றும்பலங்குன்றூர் சோதிமெய்ஞ்ஞானத்தலைவ
னொன்றும்பளங்குன்றூ ரில். கூக

இன்பமலரம்புகழை யேந்திவண்டுகொண்டுகந்தார்ப்
பன்பொருவுஞ்செய்சூழ் பழனியே—யன்பர்
வயமாறிரண்டார் வலாகனைவென்றோங்கும்
புயமாறிரண்டார் புரம். கூஉ

போர்த்தலைவில்வண்டேந்திப் போந்ததிருமாலடுந்துப்
பார்த்தனிகர்காச்சூழ் பழனியே—யார்த்த
திடவந்தமருகனூர் செல்வரரிநேசித்
திடவந்தமருகனூர் சேர்பு. கூங

நன்னிலைபெற்றம்புயனு நண்ணிமணிக்கோபுரங்கள்
பன்னுமறைபோலும் பழனியே—கன்னியுமை
வண்டநயனத்தான் மருகன்கருணைகுறி
கொண்டநயனத்தான் குடி. கூச

கந்தரநாகம்புலிபூங் கான்மருவிமாளிகையின்
பந்திவரைபோலும் பழனியே—சந்ததமங்
காவின்மனங்குழைவார் காதினர்பொய்யாமொழியார்
பாவின்மனங்குழைவார் பற்று. கூரு

மாகோடமேத்தலைந்து மால்பதமேல்வாழ்ந்துதசம்
பாகீரதிசேர் பழனியே—மோகாதி
யாயவரும்பாவநத்தா ரன்றுநற்கீரன்கவலை
போயவரும்பாவநத்தா ரூர். ௯௬

பூணுவளைகோடிலங்கிப் பொன்னகில்சேர்ந்தாவணமால்
யாணியெனவாழும் பழனியே—நீணிலவு
வாய்க்குமதிபன் மழைதவழ்காக்குன்றமலை
வாய்க்குமதிப்ன் மனை. ௯௭

மேற்கலையுட்டோய்ந்துவந்து வெவ்வான்கைக்கொண்மென்னர்
பாற்கரனைநேரும் பழனியே—சேற்கருங்கண்
முத்தமணிவார் முலைவள்ளிநாயகர்வே
லத்தமணிவா ரகம். ௯௮

மன்னிசைமான்மேன்மைதங்கி மாலையுதவித்தமிழ்விற்
பன்னர்மதிபோலும் பழனியே—சொன்னவொரு
மூத்தாகமவித்தார் மோனந்திகழ்பேரின்
பத்தாகமவித்தார் பற்று. ௯௯

மத்தமலரும்பணியு மாமதியுங்கொண்டுசிவ
பத்தரரற்கொக்கும் பழனியே—வித்தநெறி
போதுமறவா னுலகிலெனையாளுவதெய்
போதுமறவான் புரம். ௧௦௦

கொற்றவடிவேற் குமரன்பழனிவெண்பா
வுற்றவிருபத்தைந் தோர்திறமேன்—மற்றிருபத்
தைந்தோர்திறமிருபத் தைந்தோர்திறமிருபத்
தைந்தோர்திறமா மரோ ௧௦௧

வாழிபுவிவாழிசுரர் வாழிகடல்வாழிமுகில்
வாழிமறைவாழியறம் வாழிதவம்—வாழிதிரு
வாழிநிதிவாழிகதி வாழிபதிவாழிமதி
வாழிமலைமேவுபெருமான். ௧௦௨

தெய்வநலம்வாழி திருநீறுவாழியருட்
சைவசமயநெறி தான்வாழி—கைவடிவேல்
வாழிதுவிசேர்தோகை வாழிமேவுவேழமாது
வாழிவாழிதூயகான மான். ௧௦௩

(திருப்பழனி வெண்பா முற்றிற்று.)

உ

கடவுள் துணை

பழநாபுரி

ம-ள-ள-ஸ்ரீ கனம் பொருந்திய

மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்களாலியற்றிய

# சிவகிரியமகவந்தாதி.

## விநாயகர்துதி.

### கட்டளைக்கலித்துறை.

கனகமருவி கொழிக்குஞ்சிவகிரிக் காரணன்மேற்
கனகமருவி னமுதினந்தாதிசொல் லைக்கிபமு
கனகமருவி புதரிடர்தீர்த்த கணுதிபன்கோ
கனகமருவி கசிதமென்பூவடி காப்பென்றுமே.

## நூல்.

திருமாதரங்க னவரதம்போற்றுமை செல்வசெங்க
திருமாதரங்க வடவையும்போன்றெதிர் சென்றுநதேத்
திருமாதரங்க வுணர்த்தேய்த்தவேற்கைச் சிவாசலமு
திருமாதரங்க வலைதீர்த்தெனக்கருள் சீர்வரமே. ௧

வரவஞ்சினவ சுரலாவென்மாயன் மருகபவ
வரவஞ்சினவ மலர்சூழ்சிவகிரி வாணபரு
வரவஞ்சினவ மரம்பானுருக்க மகளிர்பணி
வரவஞ்சினவ மதிநல்குன்பாத மலர்தஞ்சமே. ௨

மலரும்பாராக வனசமின்னார்மன்ன வண்மையரு
மலரும்பாராக முகிர்தமிழ்செல்வம் வரவருள்வி
மலரும்பாராக நெகிழ்ந்தேத்தச்சென்றமுன் மாத்தடிந்த
மலரும்பாராக கனந்தோய்சிவகிரி வந்தவனே. ௩

வந்தனந்தங்க வலையறச்செங்கிலர் மாய்த்தனர்த
வந்தனந்தங்க வணிநிதம்பந்தரு மாதர்மற்று
வந்தனந்தங்க வடமீட்டுவாரும் வகையெவன்கொல்
வந்தனந்தங்க வயல்சூழ்சிவகிரி வாழ்பவனே. ௪

பவளங்களிக்க னயசெவ்விதழ்மொழிப் பார்ப்பதியென்
பவளங்களிக்க வருசேய்சிவகிரிப் பண்ணவன்றுய்ப்
பவளங்களிக்க வினைவனிக்காக்கும் பரன்பதவின்
பவளங்களிக்க வலைவேலைநீந்துநர் பற்றுவரோ. ௫

வலாவருந்தாம தமதிற்சுழன்று வளர்கிளைச்செல்
வலாவருந்தாம மகளிரைநம்பிய மன்விடுப்ப
வலாவருந்தாம திரசேர்வலைக்க மயங்கியிறு
வலாவருந்தாம லெனையாள்சிவகிரி வானவனே. ௬

வானத்தருமை மதிதோய்சிவகிரி மன்னகன்குய்
வானத்தருமை முகில்வாகனரு மறையவரும்
வானத்தருமை யுறவின்முனிவரும் வாழ்த்துகனல்
வானத்தருமை மகிழ்பாலகாவென் மருடயிர்த்தே. எ

மருமஞ்சரிய தணிந்தன்பதங்கள் வணங்கினெக்கா
மருமஞ்சரிய திருங்கையின்னார்வினை மாய்ப்பர்விண்ண
மருமஞ்சரிய மதிதோய்சிவகிரி வாசவெஞ்சூர்
மருமஞ்சரிய வயில்விடுஞானதி வாகரனே. அ

வாகமலாதன மாதிருஞ்சிவ மால்வரைத்தே
வாகமலாதன குங்கதிர்கோர்கெடன் மானகிரு
வாகமலாதன வாமிடர்நீயுறின் மாறுமன்றோ
வாகமலாதன னேத்தவின்னேமயில் வாகனத்தே. கூ

கனத்துப்புடைத்த வளமென்பிறையெழில் காட்டுநுதற்
கனத்துப்புடைத்த முலைப்பேதையர்மயல் கைப்பதுபு
கனத்துப்புடைத்த ரணிக்குனையன்றிக் கதிவெவன்க
கனத்துப்புடைத்த வனன்றோய்சிவகிரிக் கற்பகமே. க0

கற்பவந்தத்து மொளிர்தென்சிவகிரிக் கர்த்தனைச்சங்
கற்பவந்தத்து னெறியிற்புகாமற் கருதிமறு
கற்பவந்தத்து விடக்கற்பதேபெருங் கற்புமற்றைக்
கற்பவந்தத்து மனமேவிவ்வுண்மையைக் கண்டுகொள்ளே. கக

கண்டகருவரி பொன்றிடவென்ற கடம்பசொற்கற்
கண்டகருவரி மென்குழற்குஞ்சரி கண்களிகூர்
கண்டகருவரி னந்தீர்சிவாசல காலையென்றாழ்
கண்டகருவரி போலென்மயக்கறக் கைத்தருளே. க௨

கைக்கும்பரமன முங்கற்பமாங்கனங் கண்டகர்தோள்
கைக்கும்பரமன வெங்கணையால்விழக் காய்ந்தவன்வாழ்
கைக்கும்பரமன னேத்துஞ்சிவாசலன் கான்மயிலூ
கைக்கும்பரமன தன்பான்மயங்குமிக் காரிகைககே. கங

காரியங்கண்ட மனத்தர்தொழப்புனங் காத்தசகக்
காரியங்கண்ட னயதினைமாவிழை கார்தமழைக்
காரியங்கண்ட மடர்தென்சிவாசல கந்தரத்திற்
காரியங்கண்ட வமைத்தோன்சுதநின் கருணைசெய்யே. கச

கருவந்தவாமந் தரவான்குழலியர் கைப்பமேம்பு
கருவுந்தவாமந் தரகம்புகாதெனைக் காத்தருள
கருவந்தவாமந் தரநீள்சிவகிரிக் கந்தமுந்தக்
கருவந்தவாமந் தரவுடற்சூர்வலி காய்ந்தவனே. கரு

தவனந்தரவரு வேசையானைத் தவர்களனந்
தவனந்தரவரு பாயத்திடேலுன் சரணெனைச்சந்
தவனந்தரவரு கோங்குஞ்சிவாசலத் தாய்தமிழ்மா
தவனந்தரவரு ளும்பர்கொண்டாடிய தற்பரனே. ௧௬

பரமருந்தாமனத் தேவருங்கண்டகப் பாதகவம்
பரமருந்தாமனத் தோருங்கொண்டாடிறை பாசேரும்
பரமருக்தாமனத் தன்பூஞ்சிவாசலன் பற்றருள்சிற்
பரமருந்தாமனத் தந்துயர்க்கேத்தவன் பாதநெஞ்சே. ௧௭

பாதவமாகம ணிச்சூழ்சிவகிரிப் பைந்தொடைமார்
பாதவமாகம நீத்தியிலென்னைப் பரிந்திருப்
பாதவமாகம லீட்டாலுனக்கும் பரிவருமப்
பாதவமாகம ரூமாமியென்று பணித்தருளே. ௧௮

பணியவகமைய வணிக்தோன்சுதவம் பரமகவான்
பணியங்கமைய னயன்சூழ்சிவாசல பைந்தளிரும்
பணியங்கமைய லரியயர்பற்றிற் படாதவகை
பணியங்கமைய திமதிதந்தாளுன் பதஞ்சரணே. ௧௯

சரதவிராம தகயமதனத ருதிபத
சரதவிராம வெனலோபனைப்பழிச் சாதினிவந்
சரதவிராம திபுகாச்சிவகிரித் தண்கடம்பின்
சரதவிராம லுனைப்பாடச்செய்தருட் சார்புகல்கே. ௨௰

சாரங்கவிய ருமையறியாமந் தளைப்பவமே
சாரங்கவிய லுழுத்தளைக்கஞ்சுந் தமிழ்சசொலிவி
சாரங்கவிய மயகைமற்காலெனைச் சந்ததம்பூந்
சாரங்கவிய னிசைசூழ்சிவகிரிச் சண்முகனே. ௨௧

முகந்தவனங்க சமேபோக்கிப்பெய்யு முகிறவற்க
முகந்தவனாக விவயற்சிவகிரி முந்தயவிம்
முகந்தவனங்க சாந்தநித்தாளெனை முற்றுமிங்குன்
முகந்தவனங்க ளறத்தெரிசிக்கு முறைமைதந்தே. ௨௨

தந்தேயமர நுடங்கிடைமாதர் தனயானந்
தந்தேயமர செலைபெரினுங்கதி சார்வர்கொல்வி
தந்தேயமர ரினஞ்சூழ்சிவாசலன் ரூன்பவதொந்
தந்தேவமர பிணிற்பணியாதபொய்த் தாமதரே. ௨௩

தாமங்கலந்தக ருங்குழற்குஞ்சரி தன்பதிச
தாமங்கலந்தக வோங்குஞ்சிவாசலன் ருணிணைவோர்
தாமங்கலந்தக ளூர்புகலின்மறந் தார்கடல்வாய்த்
தாமங்கலந்தக ருற்றெனவீழ்வர்புன் சஞ்சலத்தே. ௨௪

சலனமனந்தவ ருந்துகறங்கத் தவித்துநின்றீர்
சலனமனந்தவ லங்கொளலாமென் றஞ் சற்றுமின்றஞ்
சலனமனந்தவ ருதியர்போற்றத் தழைத்தசிவா
சலனமனந்தவ ரோதயவேலன் றனைநம்புமே. ௨௫

தனையமராவதி யன்பினெண்ணுநர்க்ககல் சம்புதந்த
தனையமராவதி ரந்தோய்சிவாசலத் தாயெனக்கந்
தனையமராவதி காத்தோனைவாழ்த்தச் சலிப்பெனவித்
தனையமராவதி னிப்புரியேல்வஞ் சகநெஞ்சமே. ௨௬

சகவனத்தத்தி விடேலெனையன்றோர்பத் தன்பயம்பி
சகவனத்தத்தி னிறக்கூற்றட்டோர்க்கருள் சத்தியவா
சகவனத்தத்தி லசுறுதல்வள்ளி தழுவுமுல்லா
சகவனத்தத்தி கடாத்துஞ்சிவகிரித் தாயகனே. ௨௭

தாயம்பரவின ருரியர்போகமஞ் சார்க்கிரங்கா
தாயம்பரவின ருளெஞ்சடிலர்மைந் தாசுனைநீர்
தாயம்பரவின மாவுண்சிவகிரிச் சண்முகத்தெந்
தாயம்பரவின தண்டாயுதாநல்குன் றன்பதமே. ௨௮

பதங்கமலங்கலை கண்முலைபந்தெனும் பாவையர்சீர்
பதங்கமலங்கலை யேகொள்வினக்குறும் பண்பெனவேட்
பதங்கமலங்கலை யுந்தீர்த்தெனக்கருள் பாலிகடம்
பதங்கமலங்கலை நீர்சூழ்சிவகிரிப் பாவலனே. ௨௯

பாவக்கருமங்கு மைத்தேவரமுட் பரமவின்பம்
பாவக்கருமங்கு னேர்பயிர்போற்பத்தி பல்கநல்கப்
பாவக்கருமங்கு முத்தருநூற்றுப்பத் தாந்தொகைதப்
பாவக்கருமங்கு வாழ்த்துஞ்சிவகிரிப் பார்த்திபனே. ௩0

பனகமடங்க வருமயிலாய்மஞ்சி பங்களெனப்
பனகமடங்க லதிர்சிவவெற்பவின் பக்கடற்ற
பனகமடங்க ணிகர்புலத்தோர்தொழும் பாதவிங்கென்
பனகமடங்க சடுநீத்தருள்செய் புராசுகமே. ௩௧

சுகந்தவரும்பழ கார்தனவள்ளி சுகம்பெறக்கொஞ்
சுகந்தவரும்பழ முண்மைபங்காவிற் சுருதிகளஞ்
சுகந்தவரும்பழ கப்பன்சிவகிரித் தங்கன்னெஞ்
சுகந்தவரும்பழ வல்வினைதீர்த்தரு டேய்மதியே. ௩௨

மதிக்குமலைக்கு மதற்குமுடைந்திந்த மாதுனையே
மதிக்குமலைக்கு வளைக்கட்சகிகளை வய்யவுஞ்சம்
மதிக்குமலைக்கு மருவாய்சிவகிரி வாழ்மலர்த்தா
மதிக்குமலைக்கு வலையமும்போற்று மனோகரனே. ௩௩

காவிலகாதவ நீதியிற்சென்றல கம்பிழைப்ப
கரவிலகாதவ கங்காத்தான்மயங காதூதுறு
கரவிலகாதவ னோர்வேற்சிவாசல கணடகாக்காய்
கரவிலகாதவ காயேனையூழ்வினைக கட்டறுத்தே. ௧௪

கட்டத்தியான மருஞ்செய்புகத்தலைழ காத்தொறும்ப
கட்டத்தியான நறவ்குஞ்சிவகிரிக் கட்குகவினை
கட்டத்தியான கலையாதுஞானக் கனிவருன்பு
கட்டத்தியான முதற்சிர்சிகூடக் கடைக்கணித்தே. ௧௫

கணிக்குமரவம கோதியமுதங் கைத்தசொன்முக்
கணிக்குமரவம குஞ்சடையாற்குங் கவின்புதல்வ
கணிக்குமரவம ரஞ்சூழ்சிவகிரிக் கான்மலாப்பூவ
கணிக்குமரவம ரேசமுன்னின்றெனைக் காவென்றுமே. ௧௬

என்றேகமல மயக்கைக்கடிந்த வெய்திடுகான்
என்றேகமல கலாவொன்றுஞ்சன் றதென் செய் தேவன்பிணியால்
என்றேகமல மராமுன்சிவவெற் பிடத்திலெளிர்
என்றேகமல பதந்தொழவென்னை யிணைகருணைவயே. ௧௭

வையத்திரவிய னோத்திரமாதர் வசத்தழுந்த
வையத்திரவிய நெஞ்சமைக்கெஞ்சி யணங்கிகல்லோர்
வையத்திரவிய மாலகொண்டெய்யாதென் வயிற்கருணை
வையத்திரவிய னாவுஞ்சிவகிரி வல்லவனே. ௧௮

வனப்பாவலருள நாட்டமின்றார்புன் மயக்கெனைப்பா
வனப்பாவலருள வந்தான்குகபல வாவிமல்க
வனப்பாவலருள தேன்பாய்சிவாசல வாட்டலென்சொல்
வனப்பாவலருள வர்க்கினையாதமெய்ம் மாதவமே. ௧௯

மாதவியாம லகஞ்சூழ்சிவாசல வாழிமய
மாதவியாம தாரதனமுடை வரவருள்வீம்
மாதவியாம மனந்தேற்றிமுத்தி வழிதனைச்சும்
மாதவியாம லுணர்பணபெனக்கு வருவிப்பையே. ௨0

வருந்தாரமய்ய வதிசுதாதி வலைச்சுழன்று
வருந்தாரமய்ய மனந்தாய்வின்மீளெடு வார்கழைக்க
வருந்தாரமய்ய மறமின்சிவாசல வணமணநி
வருந்தாரமய்ய தொழிந்தேயருள்செய் வளரின்பமே. ௨௧

வளைமவனப்பு மதிதுதிபங்கய மங்கையென்ப
வளைமவனப்பு ளிவர்மாதருள்கதி வந்துறுக
வளைமவனப்பு கரிபமுகன்றனை வுள்ளறன்ற
வளைமவனப்பு ளிதச்சிவவெற்பை வலஞ்செயினே. ௨௨

வலவம்பரம னயகட்குறத்தி மணாளசெஞ்சே
வலவம்பரம வெனச்சிவவெற்பனை வாழ்த்தியென்று
வலவம்பரம னுமமையாப்பவ மாற்றுதிநீ
வலவம்பரம களிர்காதல்கொண்டு மலைக்குநெஞ்சே. ௪௩

மலைவருமங்க நிலையன்றிதகல் வழியுணரா
மலைவருமங்க விழாமுனெஞ்சேபணி மன்னுசிவ
மலைவருமங்க வனமயில்வீரனை மாற்றுமைக்கம்.
மலைவருமங்க டொடுத்தலினென்பெறு வான்பலனே. ௪௪

பலவிடையப்பரி பாய்தலினல்வரு பாதகம்பற்
பலவிடையப்பரி ஆடழுந்தாதகண பார்த்தெனையாள்
பலவிடையப்பரி பாடுஞ்சிவகிரிப் பண்டிதவம்
பலவிடையப்பரி யங்குகட்டோன்று பரம்பொருளே. ௪௫

பரம்பரவச்சிர ஞாலத்தெனக்குன் பணியருள்பம்
பரம்பரவச்சிர கந்தாழ்மூலைக்குறப் பாவையுணர்
பரம்பரவச்சிர தத்தெகிர்சூர்வென்ற பாலனவும்
பரம்பரவச்சிர ரெண்சிவவெற்பவின் பந்தகவே. ௪௬

தகரவரும்பல ராரக்குழலியர் தந்திறத்தாழ்ந்
தகரவரும்பல மூடருங்காணத் தகாயயில்வைத்
தகரவரும்பல வத்தாய்சிவாசல சண்டன்வினை
தகரவரும்பல தாயமுந்தீர்த்தருள் சத்துவமே. ௪௭

துவருமுருக்க மலருவைவாச்சியர் தொங்கமெம்மு
துவருமுருக்க ளரிதேலெனக்குத் துறவசெப்போ
துவருமுருக்க முனக்கிலையாவருள் சூதமஞ்சத்
துவருமுருக்க வனவேற்சிவாசல சுந்தரனே. ௪௮

தரமனமான வளைப்போய்க்கெஞ்சாதமெய்த் தன்மைமுதிர்
தரமனமான தனையேகொண்டாடத் தயைசெய்கிரந்
தரமனமான டக்குஞ்சசிபதி தாழ்சிவபூ
தரமனமான தனையேந்துவோர்க்கந் தனவிளைந்தே. ௪௯

தனவிலையங்கனை மார்தோட்படிந்தணி தார்துகில்சந்
தனவிலையங்கனை யர்க்கேசம்பாதித் தவிற்பிணிழிந்
தனவிலையங்கனை யாமுணைப்புன்மைமசச் சாதிதமு
தனவிலையங்கனை செஞ்சேசிவாசலத் தான்புகழே. ௫௦

தானந்தவமரு மைப்பெருங்கல்வித் தரம்பலநி
தானந்தவமரு வப்பெறினுஞ்சகத் தீர்தழலாய்த்
தானந்தவமரு ளோர்வேற்சிவாசலன் றன்னைமறந்
தானந்தவமரு மர்ப்பரிதாவிது சத்தியமே. ௫௧

இயங்காமலையம் பிறைக்கிளையாமலென் சிந்தைதிருத்
இயங்காமலையம் பொலிதமிழ்யாவுந்தந் தேமிகளித்
இயங்காமலையம் பிரிதவர்போற்றுஞ் சிவகிரிச்சோ
இயங்காமலையம் பகவேற்கரிபுத் திரியங்கனே. ௫௨

திரியம்பகவ ரதன்சனிக்காகத் திரண்மகரந்
திரியம்பகவ வனிகொடிமுன்வலஞ் செய்தசிவாத்
திரியம்பகவ னடிபோற்றுமன்பினெஞ் சேமிகமு
திரியம்பகவ விசைமுதற்பாவவன் சீர்புகன்றே. ௫௩

புகலப்புவன முடித்தேவுமெய்க்கும் புலைநெஞ்சையன்
புகலப்புவன வரிபோற்செலேலெனப் போற்றினும்பாய்
புகலப்புவன முலையாரிற்போமெற்குன் பொன்னடியே
புகலப்புவன சவயற்சிவாசல போதநல்கே. ௫௪

போதகவேத மொழித்தோன்மருகன் புகழ்வனசப்
போதகவேத னிறைஞ்சுஞ்சிவாசலன் பூங்கழற்கட்
போதகவேத மிழைப்பாடென்றூற்புறம் போவதுபண்
போதகவேத தனிற்பெறுவாய்புன் புலன்கொணெஞ்சே. ௫௫

புலவாமலின தரந்தாவிரகம் பொறுப்பதன்றூற்
புலவாமலின மெனவென்றயற்பெண்பின் போந்துழலும்
புலவாமலின ரிடத்தும்புகாதெற் புரந்தருண்மெய்ப்
புலவாமலின திகன்சூழ்சிவகிரிப் புங்கவனே. ௫௬

கவடம்புலிய னயநீயர்நட்புவெங் காமமனே
கவடம்புலிய களவுளனேனுங் கமித்தெனையாள்
கவடம்புலிய புயபார்கனங்கெனக் கான்றருப்பூங்
கவடம்புலிய துலைக்குஞ்சிவகிரிக் கந்தப்பனே. ௫௭

கந்தங்கவரு மளித்துளவோரற்றங் கண்டுறச்சிங்
கந்தங்கவரு விகலதிர்சார்பெங்குங் காத்தலிற்றூற்
கந்தங்கவரு சிவாசலநல்குன் கழல்களன்பு
கந்தங்கவரு வினைநீர்க்கிடத்தொழுங் காதலெற்கே. ௫௮

காதமருங்குல வன்பருமேங்கமங் காமுனெனைக்
காதமருங்குல மாமணித்தோட்டுருக் கண்டிடத்த
காதமருங்குல ரம்பையரானைபைங் கர்மணமோர்
காதமருங்குல வுஞ்சிவவெற்ப கலாநிதியே. ௫௯

கலாபத்தருண மயிலூர்சிவாசலன் காணனெஞ்சி
கலாபத்தருண குதற்கேயெளியகண் டார்ப்பாக
கலாபத்தருண தியினகத்துய்க்குமெக் காலுமயற்
கலாபத்தருண னெதிரிருளென்னக் கடிதவித்தே. ௬0

வித்தையிலக்கண னேர்வாரைப்பாடி விழாமலின்ப
வித்தையிலக்கண வாதபுகழ்ச்சிவ வெற்பனைச்சே
வித்தையிலக்கண மெய்ப்பாச்சொலுஞ்செவ் வியர்க்கறும
வித்தையிலக்கண மைந்தாலுங்கூற்றை விலக்குவரே. ௧௧

குவலயமாவன டாத்தத்தொழுஞ்சிவக் குன்றவயங்
குவலயமாவன சூழ்திண்புயவின் குமணமுனைக்
குவளையமாவன கக்குணநீவஞ்சங் கூரினென்செய்
குவலயமாவன சம்போனின்றானல் குலைவெனக்கே. ௧௨

குலையாகவந்த விராகத்திடிற்பழி கூறுமுனைக்
குலையாகவந்த மலர்யோனின்றளினிற் கூடியெனையங்
குலையாகவந்த நறுந்தார்ச்சிவாசல கூர்திறல்வா
குலையாகவந்த னிலடரும்பற்செறங் கோளரியே. ௧௩

அரிதப்பரிய லரிதொழும்பாதனன் றும்பயிரா
யரிதப்பரிய லறுநெஞ்சுறுன்பண் டறமடந்தை
யரிதப்பரிய முலையுண்சிவாசல னன்பர்க்கல்லால்
அரிதப்பரிய லுளபவந்தீர்ந்தரு ளாடுதலே. ௧௪

ஆடகவற்ப மகற்றிநின்பாத மருளியெனை
யாடகவற்ப ரிறைஞ்சுஞ்சிவகிரி யாய்சமர்பா
யாடகவற்ப சியமயிலூர்கும ரய்யமணி
யாடகவற்ப னிருபுயஞான சுகாரம்பனே. ௧௫

ஆரஞ்சலிக்கு நகையுமைபாலன லர்ப்பகழி
யாரஞ்சலிக்கு வளைத்தெய்பவற்குடை யாதமதி
யாரஞ்சலிக்கு மொருசிவவெற்ப னலதுபின்னை
யாரஞ்சலிக்கு மிசைத்தீர்த்துற்றார்க்குற வாவர்களே. ௧௬

ஆவலிதாங்கு தவாதுகதிபொரு ளாதிநிலை
யாவலிதாங்கு மயக்கதனாலுன் னரியதன்மை
யாவலிதாங்கு படைபோற்கெடாம லடைதிகனி
யாவலிதாங்கு விவயற்சிவவெற் பரசைநெஞ்சே. ௧௭

அரவமளிக்கு லமதெழுப்புங்குழ லக்கணிகை
யரவமளிக்கு நெறியிற்செலாதெனை யாண்டருள்செய்
யரவமளிக்கு முறுங்காருலாவுசி வாசலத்தோ
யரவமளிக்கு ரியன்மாமருகவந் தஞ்சலென்றே. ௧௮

அஞ்சவித்தார மலரோனைப்பார்த்தன் றவன்கலங்கி
யஞ்சவித்தார கமுதற்பொருளென் னறைகவென்றே
யஞ்சவித்தார கலாவேற்சிவாசல வாய்ந்துளசை
யஞ்சவித்தார தகநேயயானின் னடைக்கலமே. ௧௯

கலவியவாவி மடவாரொங்கென்று கலாந்துபல்ப
கலவியவாவி மனஞ்சுழலாதெனைக் காவினைய
கலவியவாவி புதர்போற்றியவலங் காரவெண்மங்
கலவியவாவி திகழ்சிவவெற்பிற் கடம்பவின்றே. ௭0

கடமைவிலங்க தெனப்பயின்றேகொலுங் கள்ளவண்டர்
கடமைவிலங்க வழக்கைக்கெஞ்சிப்பற் காட்டியசங்
கடமைவிலங்க வருள்புரிக்தென்றனைக் காப்பதுநின்
கடமைவிலங்க ளெலாந்தாழ்சிவகிரிக் காவலனே. ௭௧

காவதங்காத னைறபாய்களபக் கவின்புயக்கு
காவதங்காத வுணர்செலவென்றதுங் காசிவப்பக்
காவதங்காத வனைத்தோய்சிவாசல காணுமெனைக்
காவதங்காத மலர்ப்பதந்தந்து களிசுரந்தே. ௭௨

சுரதந்திரிய னயமென்மொழிவிலைத் தோகையர்தஞ்
சுரதந்திரிய மயத்துமெண்ணுமதி தொன்மதன்மெச்
சுரதந்திரிய மலர்காச்சிவகிரித் தூயகவீச்
சுரதந்திரிய வினைநீத்தல்வேண்டுங் துரிதத்தினே. ௭௩

தத்தினகரவ ருமனத்தேனைச் சகவினைப்பக்
தத்தினகரவ கண்பிற்றள்ளாதுன் சரணருள்போ
தத்தினகரவ கன்சிவவெற்ப தனிக்கனகத்
தத்தினகரவ ரேத்தவருமுத் தமமுதலே. ௭௪

தமனியமஞ்சக் தனிற்றுயில்வீர்தனுச் சாம்பொருள்பக்
தமனியமஞ்சக் தகனேர்முன்சேர்த்தஞ்சித் தந்தனைக்கோ
தமனியமஞ்சக் ததந்தவிராமுத் தமிழ்முனிவாழ்த்
தமனியமஞ்சக் தமால்சூழ்சிவாசலன் றுள்வசத்தே. ௭௫

வசந்தனமர தியற்றலிற்சோர்ந்ததம் மாதியற்க
வசந்தனமர கதச்சிமிழ்போன்று வளர்ந்துவிமமு
வசந்தனமர வடேந்தோகைவந்தும் வராததென்செல்
வசந்தனமர மலிசிவவெற்பருள் வாரிதியே. ௭௬

வாரியங்கஞ்சன லிந்திரனுதியர் வாழவெம்பேய்
வாரியங்கஞ்சன மார்த்தாடக்கண்டகர் மாயவம்பு
வாரியங்கஞ்சன ளென்னவெய்தோன்சிவ மாமலைசூழ்
வாரியங்கஞ்சன மாலும்புகழபி மானத்தரே. ௭௭

மானத்திலக மிலாதயற்றெய்வதம் வாழ்த்துநர்காண்
மானத்திலக தெனத்திகழ்கந்தர வாரணிகோ
மானத்திலக நுதலுமைசேய்சிவ மால்வரைவி
மானத்திலக மலனடிசேர்மின் வானமனே. ௭௮

மனத்தானகில மயல்போக்கிமுத்தி வழங்குதெய்வ
மனத்தானகில மெலாம்படைத்தான்றொழ வாழ்குகன்சீர்
மனத்தானகில விருஞ்சிவவெற்பன் வரிசிலைக்கா
மனத்தானகில முகிழ்வள்ளிதோய்தட மார்பத்தனே. ௭௯

மாரனவரத மார்தருநீழல் வளாகிமுனி
மாரனவரத னேத்தாறெழுத்தை மதித்துடல்விம்
மாரனவரத மென்னிற்சிவகிரி வாழுமைகு
மாரனவரத கஞ்சார்ந்தெவ்வாறு வரந்தருமே ௮௰

தருமந்திகைக்கு மனமின்றிக்கொண்ட தவர்க்குணவு
தருமந்திகைக்கு ளமைத்துக்கொணர்நடஞ் சாடதொறும்பாய
தருமந்திகைக்கு மணிசூழ்சிவாசலன் றூளுனிற்பித்
தருமந்திகைக்கு ரியர்போற்றவாழ்வர் தளர்வகன்றே. ௮௧

தளவந்தரிக்கு மடந்தையர்மால்வருத் தத்தளர்ந்து
தளவந்தரிக்கு நெலாவேற்குன்பாதந் தருதிசுர
தளவந்தரிக்கு மயற்குத்துயர்தவிர்த் தாய்முகிற்கொர்
தளவந்தரிக்கு மதனாய்சிவகிரி தங்கத்தனே. ௮௨

தங்கவலாரி னிம்முலையானைத் தழீஇமதிவ
தங்கவலாரி கழத்தவங்கொன்றுபந் தத்திடைகித்
தங்கவலாரி தயம்வாழ்சிவாசல தானவெண்மா
தங்கவலாரி மருகவின்றூட்கொளென் றன்னைவந்தே. ௮௩

வந்தேகவிந்த வழிச்சுழல்பஞ்சின் மறுகுமென்யா
வந்தேகவிந்த வருத்தமுந்தீரொநீர் வந்துநெஞ்சு
வந்தேகவிந்த லரிசூழ்சிவாசல வன்மைபரு
வந்தேகவிந்த மடத்தோர்கணெருன்றருள் வாய்மையனே. ௮௪

வாயவணங்கு மதியெற்கருளியென் வன்பவம
வாயவணங்கு மனத்தைதினது வசந்திருப்பு
வாயவணங்கு சகாறகுப்பின்னர் வரும்பவள
வாயவணங்கு வியுஞ்சிவவெற்பொளிர் மாமணியே. ௮௫

மாமனம்போருக டதறற்கின்ன வழிமயல்கம்
மாமனம்போருக வில்வீடிதென்றருள் வாதெனசும்
மாமனம்போருக மஞ்செனத்தானவர் மாயவெய்த
மாமனம்போருக னேத்துசிவாத்திரி வாழப்பனே. ௮௬

அப்பங்கரும்பு நுகர்யானைசோதர வண்டார்விழி
யப்பங்கரும்பு னைகன்றுப்பயந்தசி வாத்திரியாய்
அப்பங்கரும்பு ளிமிர்கொன்றைவேணி யணிகடவுள்
அப்பங்கரும்பு முலையாள்சுதவென்னை யாள்பரிந்தே. ௮௭

பரியங்கவரி கவிகைமற்றின்ன படைத்துலகும்
பரியங்கவரி தெனுஞ்சீர்பெறினும் பணவரவம்
பரியங்கவரி பணிசிவவெற்பனைப் பாடலரேற்
பரியங்கவரி பவத்தீயராயினைப் பாருண்மையே. ௮௮

பாரப்பனல னிலம்விண்கலங்கும் பகலுறவென்
பாரப்பனல றனைபிறர்பாலிப் பரோபமமாம்
பாரப்பனல மனனேகம்பேறனை யையவெண்ணிப்
பாரப்பனல மலிசிவவெற்பிருப் பானருளே. ௮௯

பாணந்தியக்க மணிகைகயார்வலைப் பட்டுமுழு
பாணந்தியக்க முறக்கொள்பவனெனி னும்பவந்தீர்ப்
பாணந்தியக்க ரிறைஞ்சுஞ்சிவாசலன் பாதமினைப்
பாணந்தியக்க வினுமபக்கபாரபுகழ் பாதிரனே. ௯௦

திரணங்கடிய பவந்தீரப்பதென்ன திரணத்திலோர்
திரணங்கடிய னயமெஞ்சமேயிந் திரனுடைமு
திரணங்கடிய ரிடாரூரனுக்குஞ் சியசுராபுந்
திரணங்கடிய வெழுந்தசிவாசலற் சேவிகனே. ௯௧

விக்கினரம்பை வரம்புதிறம்ப மிடைந்தமன
வக்கினரம்பை விழிக்காட்டவீழுமுன் வீடருள்கூ
விக்கினரம்பை புகக்கூறுநீஞ்சொன மினர்படிவா
விக்கினரம்பை மதுபபாய்சிவகிரி வித்தகனே. ௯௨

வித்தகவளக்கரிய மதனை வெலுந்தெருட்சி
வித்தகவளக்கரிய வயற்குள் விளைத்தருளகோ
வித்தகவளக்கரிய துரித்தவன் மெய்ச்சுதமே
வித்தகவளக்கரிய பொழிற்சிவ வேதண்டனே. ௯௩

தடைவிரும்பு வனமாயவாழ்வைச் சதமெனுமுத்
தடைவிரும்பு மனங்குழைந்தானென் றனைக்கதவித்
தடைவிரும்பு னிதவரமவள்ளி தலைவகர
தடைவிரும்பு தமிழ்ச்சிவவெற்ப சமயமிதே. ௯௪

சமயமனந்த மினைக்கேத்துனைவந்து சார்ந்துவினை
சமயமனந்த வுரங்கடந்தோர்க்கன்பு தான்செயவஞ்
சமயமனந்த விரமேக்கெற்குன்ப தமேயினித்தஞ்
சமயமனந்த னவணச்சிவகிரித் தாரகமே. ௯௫

தாரகலவித மாலசிவாசல தாக்கமரோர்க்
தாரகலவித னங்கொண்டாதிரத் தயங்கயிலவித்
தாரகலவித ரும்புயவுன்வசந் தான்செய்பர
தாரகலவித னிற்செலுமேழைநெஞ் சந்தனையே. ௯௬

சந்தவமுத கவிவலர்போற்றுகந் தன்கதிரே
சந்தவமுத வமலன்சிவகிரி தான்புகில்வ
சந்தவமுத லவனுந்தன்செய்கை சகலமுங்க
சந்தவமுத நிடஞானயோகங்கள் சாதிக்குமே. ௯௭

திக்கினமனவ கக்குரங்கேகித் தியமுவந்து
திக்கினமனவ ரோத்துஞ்சிவாசலற் சிந்தித்துமுத்
திக்கினமனவ வரவுற்றிலாய்புன் செயல்கொடுவா
திக்கினமனவ திக்கென்செய்வாயத் திறம்புகலே. ௯௮

கலைகந்தனவன சாசனன்போற்றயிற் கையசுமங்
கலைகந்தனவன கச்சிவவெற்பவெற் காப்பதன்றேற்
கலைகந்தனவன மாங்குயிற்றீஞ்சொற் கதிர்மணிமே
கலைகந்தனவன மென்களமாதர்கட் காமத்தையே. ௯௯

காமனம்பத்தி கலைவென்றரிபடர் கட்கசிதோய்
காமனம்பத்தி யொடேசூழ்சிவகிரிக் கானவன்பங்
காமனம்பத்தி னியதிக்கும்போற்றுன் கழலிணைநீங்
காமனம்பத்தி னழுஞ்சேர்த்தருண்மெய்க் கதித்தருவே. ௧௦௦

வாழி

படியேழுமேழும் பணிதெங்சிவகிரிப் பண்ணவன்பூங்
கொடிபோலு நுண்ணிடைக்குஞ்சரிகானக் குறக்குலப்பைந்
தொடிமாதிவர் புடைதன்னெங்கொளுந் துலங்குகதிர்
வடிவேலுந் தோகைமயிலுங்கொண்டென்னெஞ்சுள் வாழியவே. ௧

வாழிதடங் கடல்வாழிசெழும்புயல் வாழிசுரர்
வாழிநெடும் புவிவாழியருந்தவர் வாழிசைவம்
வாழியறம் பொருள்வாழிசகங்கதி வாழியன்பர்
வாழிசெங் கோன்முறைவையேற்சிவாசலன் வாழியவே. ௨

சிவகிரியமகவந்தாதி முற்றிற்று.

உ

கடவுள்துணை

பழநாபுரி

ம-ள-ள-ஸ்ரீ கனம் பொருந்திய

# மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்களியற்றிய

# விநாயகமூர்த்தியின் பேரில்

# பதிகம்.

---

நேரிசை வெண்பா.

சிற்றுணர்வாற் குற்றமென்ன செய்தனே னேனுமவை
முற்றுமினி நீபொறுத்தென் முன்னிற்பாய்—கற்றுயர்ந்தோர்
புந்திதனிற் றேன்றிப் பொழியுங் கருணைமதத்
தந்திமுகப் பிள்ளாய் சரண். ௧

சரணமலர் வாழ்த்தித் தமிழ்சொலப் பெற்றோர்க்கு
மரணபவ மாற்று மருந்தே—இரணவரைக்
கொப்போதுந் தம்பிமுகத் தோங்காரத் துட்பொருளே
எப்போதுங் காப்பா யெனை. ௨

எனைத்துந் திருவருளா லின்றளிக்குந் தேவே
நினைத்தன் பொடுதுதித்து நின்றோர்—வினைத்துன்ப
மாற்றுங் கயமுகத்து வள்ளால் விரைந்தெனையீ
டேற்றுஞ் சமைய மிது. ௩

சமயந் தொறுநிறைந்த தற்பரமே யன்பர்க்
கமையுந் தனித்தெள் ளமுதே—யுமைதந்த
கண்மணியே யானைமுகக் கற்பகமே பேரின்ப
விண்மணியே யான்வாய் விரைந்து. ௪

விரைததும்பு ஞானமத வேழமுகத்தெந்தா
யுரைகடந்து நின்ற வொளியே—வரைவிளங்கப்
பாரதத்தை முன்னெழுதும் பாசாங் குசதரவென்
கோரதத்தை மாற்றியருள் கூர். ௫

கூரியவேற் கண்ணார் கொடியமய லைத்தவிர்த்துச்
சீரியபே ரின்பத் திறனருளிப்—பாரிலெனை
நீயடிமை கொண்டு நிதங்காத் திடல்வேண்டுந்
தூயமத வேழமுகத் தோய்.

தோயுங் களப சுகந்தமட வார்விரகப்
பேயுங் கடலைப் பிணியுமினி—போயும்
படிபுரிந்து வேழமுகப் பண்ணவனே யென்னை
யடிமைகொண்டு நீயாண் டருள் ௭

அருளா யுருவா யருவாயப் பேரின்பத்
தெருளாய் முடியமறை தேடும்—பொருளாய
தந்திமுகத் தோனே தமியேன் குறித்தவரம்
வந்தினிது தந்துதவு வாய். ௮

வாயா லுலுத்தர்தமை வாழ்த்திருந் தாமலெனை
நீயா தரித்து நிதங்காப்பாய்—வீயாக
தொண்டரித யாம்புயமாந் தூயமணிக் கோயில்குடி
கொண்டகண நாதவருள் கூர்ந்து. ௯

கூர்ந்தமதி தந்தடிமை கொண்டெனையாள் வேதமின்னுஞ்
சார்ந்தறிய மாட்டாத் தனிக்களிறே—தேர்ந்து
கடைசிறந்த வின்சீர் கவிலுங் திறமை
யுடையதன்றே யென்சிற் றுணர்வு. ௧0

முற்றிற்று.

உ

கடவுள் துணை

பழநாபுரி

ம-ா-ா-ஸ்ரீ கனம் பொருந்திய

# மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்களியற்றிய

# ஸரஸ்வதி அம்மன் பேரில்

# பஞ்சரத்தினம்.

---

ஆசிரிய விருத்தம்

சீர்கொண்டசெம்பொற்சிலம்பிசைததும்புநது சீதளவனசபாத
தெரிசனமேலக்கனுதினங்கொடுத்தெண்ணியவை சித்தியாம்படிமுடித்துக்
கார்கொண்டகனப்ருவகாலமுகில்போலமுதிர் கவிதைமழைதடைபடாமற்
கனிவினொடுபொழியவென்வாக்கினிற்குடிவந்து கருணைநீபுரிதல்வேண்டும்
பார்கொண்டஜீவபரிபாலனகுணாலப்ர பாகரானந்தவடிவே
பலதேவகணவினுதபடிகரத்னபரண பரிமளவிநோதவமுதே
நார்கொண்டவடியர்மனநடனமயிலேபிரம னுவீற்றிருந்தகுயிலே
நாதஷட்பதவேணிவேதபுத்தகபாணி ஞானமுத்தமிழ்வாணியே. க

அன்னைநின்கருணைகடாக்ஷமெளியேற்கோ ரணுத்துணைகிடைத்திருந்தும்
அதுகொண்டுனைப்பாடியானந்தமடையாம லந்தோவயர்ந்துவீணே
சன்னைபொன்றறியாசசருவசங்கடலோப சண்டாளரைத்துதித்துச்
சரசமதுரப்ரபந்தங்களையிறைத்துத் தரித்திரத்துழல்வதழகோ
வென்னையிங்கிப்படியிடாக்கடல்புகுத்திடா தீடேற்றியருளல்வேண்டும்
இனிநீபராமுகஞ்செய்டத்தகாதுபுக லிலெனக்குன்னையன்றி
நன்னயந்தருதவளநளினமணடபகனக நவரத்னமயபூஷணீ
நாதஷட்பதவேணிவேதபுத்தகபாணி ஞானமுத்தமிழ்வாணியே. உ

காளிதாசன்பாணகவிஸ்ரீமகவிதண்டி கட்டுளைப்பட்டமூர்த்தி
கம்பனுயர்புகழேந்திகாளமேகஞ்சொற் கனிந்தவொட்டக்கூத்தனென்
றுளிரோராகுமிவரனைவருமுனைப்போற்றி யல்லவோமகிமைபெற்றார்
அப்படித்தமியேனையுந்தொண்டுகொண்டாத் தருளவிதுசமையமம்மே
வாளியோடிச்சிதறவாளுறைபுகக்கெண்டை வாவிநீருடொளிப்ப
மான்பிணைவனந்தோறுமறையப்பொலிந்துசெவ் வரிபடருநயனதருணீ
நாளிலோர்நாளுமறவாதுதொழுவாரிதய நளினமேவியவன்னமே
நாதஷட்பதவேணிவேதபுத்தகபாணி ஞானமுத்தமிழ்வாணியே. ௩

சம்பந்தரப்பர்சுந்தரராருணகிரியார் தழைக்குநக்கீரதேவர்
சாதமாணிக்கவாசகர்சிவப்பிரகாசர் சாந்தசிவஞானமூர்த்தி
ரும்பந்தமிக்கமுச்சங்கநன்னுவலர் குலாவுபொய்யாமொழிமுதற்
கோதிலாவாணர்களெலோருமின்னருள்சிறிது கூடியனன்றேவுயர்த்தார்
வெம்பந்தபவரஹிதவீடென்றனுலலது வேறொன்றறிஞெய்துமோ
மெய்யானதெய்வநீயாதலாலெனையிந்த வேளையீடேறநலவேண்டும்
நம்பந்தமுனிவாமனதீபமேயெவ்வுலகு நல்குபேரின்பவாழ்வே
நாதஷட்பதவேணிவேதபுத்தகபாணி ஞானமுததமிழவாணியே. ௪

அகவிருளறப்பெற்றரும்பொருளனைத்தையு மறிந்துநெறிதுநீதிதென்
றனுதினமதிதநித்யாநித்யசாதன மதேதவீடடைவதற்குத்
திகழுனதுகட்கருணைசிறிதேனுமின்றியெத் தேவராலுவகூடுமோ
திறமாகவெனவாக்கினிற்குடியிருந்துபல சிதநியுநதந்துகாப்பாய்
சுகவிமலசிற்பரஞ்சோதியேபேரினப சுத்தசைதனயவாழ்வே
சமுகசந்தோதயசுலக்ஷணசுமங்கள சுசீலசுந்தரசொரூப
நகபருவகற்பூரகுங்குமபடீரகன் னயபயோதராதனமே
நாதஷட்பதவேணிவேதபுத்தகபாணி ஞானமுத்தமிழ்வாணியே. ௫

முற்றிற்று.